உதயன்

விலை ரூபா 8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆனி 29 செவ்வாய்க்கிழமை (13-07-2004)UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:231

# நோர்வேத் தூதுவர் - தமிழ்ச்செல்வன்

# வன்னியில் இன்று சந்தித்துப் பேச்சு

## யுத்தநிறுத்த நிலையை உறுதிப்படுத்த முயற்சி

கொழும்பு,ஜூலை13

**இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப் பணிவகிக்கும் நோர்வேத் தரப்பின் சார்பில் கொழும்புக்கான அதன் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இன்று காலை 10 மணிக்கு கிளிநொச்சிக் குச் செல்கிறார். புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை அவர் சந் தித்துப் பேசுவார்.**

நோர்வே அனுசரணைக்குழுவைச் சேர்ந்த விசேட பிரதிநிதி எரிக்சொல்ஹெய்ம், தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோர் கடந்த 30 ஆம் திகதி கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசியிருந்தனர்.

அதன்பின்னர் கொழும்பில் அவர்கள் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங் கவைச் சந்தித்துப் பேசினர். எனினும், அந்தப் பேச்சின் பெறுபேறுகளை புலிகள் தரப்புக்குத் தெரிவிக்காமலேயே எரிக் சொல்ஹெய்ம் நோர்வே புறப்பட்டார். தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்

(14ஆம் பக்கம் பார்க்க)

### புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக் குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள் வரிசையில நான்காவது வினாத் தாள் நாளைய உதயனுடன் வெளிவருகின் றது.

பிரதி புதன்கிழமைகள் தோறும் தொடர்ந்து வினாத்தாள்கள் வெளிவரும். வினாத்தாள் களின் மேலதிகப் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள விரும்புவோர் உதயன் பணிமனையில் அலு வலக நேரத்தில் விநியோகப் பகுதியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

## கருணாவுக்கு அரச வானொலியில் தேவையற்ற வகையில் விளம்பரமா?

### விசாரணை நடத்துவோம் என்கிறார் மங்கள

கொழும்பு,ஜூலை13

அரச வானொலியில் தேவையற்ற விளம்பரம் கருணாவுக்கு கொடுக்கப் பட்டதா என்பது குறித்து விசாரணை நடத்தப்படும் என ஊடகத்துறை அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித் திருக்கிறார்.



நேற்றிரவு பி.பி.ஸியின் சிங்கள சேவையான சந்தேசியவுக்கு அளித்த செவ்வியிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

பேட்டியில் அமைச்சர் மேலும் கூறுகை யில்,

அரசு விடுதலைப் புலிகளுடன் எவ்வளவு விரைவில் பேச்சுக்களைத் தொடங்கமுடியுமோ, அவ்வளவு விரை வில் பேச்சுக்களைத் தொடங்கும் தனது திட்டத்தைப் பாதிக்கும் எதனை யும் செய்ய விரும்பவில்லை.

அரசுக்குச் சொந்தமான வானொ லியில் கருணாவுக்குத் தேவையற்ற விளம் பரம் கொடுக்கப்பட்டதா என்பது குறித்து விசாரணை நடத்தப்படும்.

ஆனால், புலிகள் தங்கள் கருத்தையும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டணி அரசின் கொள்கைகளை மக்கள் அங்கீகரித்துள்ளனராம்

### தேர்தல் முடிவு அதனையே உணர்த்துகிறது என்கிறார் ஜனாதிபதி

கொழும்பு,ஜூலை13

அரசின் கொள்கைகளை மக்கள் அங்கீகரித்துள்ளனர். இதனை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் உறுதிப்படுத் துகின்றன.



- இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்திருக்கின்றார் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்த செய் திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை ஒன்றை ஸ்தாபிப்பதற்கு விடுதலைப் புலிகளு டன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு ஐ.ம.சு.கூட்டமைப்பு அரசு கடைப்பிடித் துவரும் கொள்கைகளை மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் உறுதிப் படுத்தியிருக்கின்றன.

ஜனநாயக மற்றும் ஐக்கிய இலங் கைக்குள் உள்ளூர் பிரச்சினைக ளுக்கு நிரந்தரத் தீர்வு காணவேண் டும் என்பதற்கு, மாகாண சபைத் தேர் தல்கள் அங்கீகாரம் வழங்கியுள்ளன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதற்கும், புலிகளுடனான சமாதா

(14ஆம் பக்கம் பார்க்க)

## அமெ. புலனாய்வு அதிகாரிகள் அடுத்த வாரம் கொழும்புக்கு!

கொழும்பு,ஜூலை13

கொழும்பு நகரில் செயற்பட்டு வரும் பயங் கரவாத அமைப்புக்களின் நடவடிக்கைகள் தொடர்பாக ஆராய்வதற்கென அமெரிக்கப் புலனாய்வு அதிகாரிகள் குழுவொன்று அடுத்த வாரம் கொழும்புக்கு வரவிருக்கின்றது என்று தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

இத்தகைய பயங்கரவாத அமைப்புக்களி னால் கொழும்புத்துறைமுகம் மற்றும் கட்டு நாயக்கா விமான நிலையம் ஆகியவற்றின் ஊடாகச் சட்டவிரோத ஆயுதங்கள் மற்றும் இர சாயனத் திரவங்கள் அமெரிக்காவுக்குக் கடத் தப்படுகின்றனவா என்பது குறித்து ஆராய் வதற்காகவே இக்குழு கொழும்புக்கு வருகின் றது என்று விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித தன என்று சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

(14ஆம் பக்கம் பார்க்க)

### இராணுவ, கடற்படைத் தளபதிகள் சகிதம்

## பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி குடாநாட்டுப் படைமுகாம்களுக்கு விஜயம்

கொழும்பு,ஜூலை13

பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும், பொதுப் பாதுகாப்பு, சட்டம் - ஒழுங்கு, பௌத்தசாசன அமைச்சருமான ரத்னசிறி விக்கிரமநாயக்க நேற்று பலாலி இராணுவத்தளத்துக்கும் அங்கி ருந்து ஏனைய வடபகுதி இராணுவ முகாம்களுக கும் விஜயம் செய்தார்.

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சாந்த கோட்டேகொட, கடற்படைத்தளபதி வைஸ அட்மிரல் தயாசந்தகிரி ஆகியோரும் அவருடன் வந்திருந்தனர்.

"இது திடீர் விஜயமல்ல; முன்னரே திட்ட மிடப்பட்ட ஒன்று. லெப் டினன்ட் ஜெனரல் லய னல் பலகல்ல தளபதி யாக இருந்த சமயமே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் இங்கு விஜ யம் செய்வதற்கு ஏற் பாடுகள் செய்யப்பட்டி ருந்தன. அப்போது தள ளிப்போன விஜயம் இப்போது இடம்பெற்றிருக்கின்றது" - என்று பாதுகாப்பு வட்டாரங்களில் கூறப்பட்டது.



ஆனால், வடபகுதிப் பாதுகாப்பு நிலை வரத்தை மீளாய்வுசெய்து, நிலைமையை அரசுத் தலைமைக்கு எடுத்துரைக்கவே பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அங்கு சென்றார் என வேறு வட்டாரங்கள் தெரிவித்தன.

நேற்றுக் காலை பலாலி படைத்தளத்தில் உயர்நிலை அதிகாரிகளைச் சந்தித்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் பின்னர் கீழ்நிலை சிப் பாய்களோடும் கலந்துரையாடினார்.

ஹெலிகொப்டரில் முகமாலை முன்னரங் கப் பகுதிக்கு சென்ற அவர், அங்கு பொது

(14ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் நீண்டகாலம் பணிபுரியும் படையினருக்கு விரைவில் இடமாற்றம்

### யாழ். வந்த ரத்னசிறி உறுதிமொழி

யாழ்ப்பாணம்,ஜூலை13

குடாநாட்டில் நீண்ட காலமாகப் பணிபுரிந்து வரும் படையினரின் இடங்களுக்குப் புதிய வர்களை நியமிக்கவும் -

இங்கு பணியாற்றியோரை அவர்களது சொந்த இடங்களுக்கு அருகில் இடமாற்றம் செய்யவும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

நேற்று யாழ்.வந்த பிரதிப் பாதுகாப்பு அமைச சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க படையினர் மத்தியில் இதனைத் தெரிவித்தார்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகப் பதவி யேற்ற பின் முதன்முதலாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த அவர் படையினரின் சேமநலன் கள் குறித்து ஆராய்ந்தார்.

நேற்று முற்பகல் 10 மணிக்கு பலாலி வந்த டைந்த பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் முதலில் அங்கு பணிபுரியும் படையினருடன் கலந்து ரையாடினார்.

(14ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்களை நாடாளுமன்றிலிருந்து விரட்ட வேண்டும்!

### இனவாதக் கூச்சலிடுகின்றார் ஜே.வி.பி. தலைவர்

கொழும்பு,ஜூலை13

"தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்களை நாடாளுமன்றத்திலிருந்து விரட்ட வேண்டும். அவர் களால் எமக்கு பிரச்சினை எழுந்துள்ளது.

- இப்படிக் கூறுகிறார் ஜே.வி.பியின் தலை வர் சோமவன்ஸ அமரசிங்க.

சிங்கள வாரஇதழ் ஒன்றுக்கு அவர் அளித் துள்ள செவ்வியில் இதுவிடயம் பற்றி அவர் மேலும், தெரிவித்துள்ளதாவது:-

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் எம்.பிக்களை ஜனநாயக ரீதியாக நாடாளுமன்றுக்குத் தெரி வானவர்கள் என்ற பட்டியலில் சேர்க்க முடி யாது. அவர்கள் நாடாளு மன்றுக்குத் தெரிவு செய் யப்பட்ட விதமே பிழை யானது. வடக்கில் நடந்த தேர்தல், மோச டிகள் நிறைந்தவை என்று நீதிமன்றில் இரண்டு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள் ளன.



எனவே, அவர்கள் சொல்லும் எந்தவிடயத் தையும் நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சு நடத்த ஜனாதிபதி தயாராக இருக்கிறார் என்று கூறி யவர்கள் அவர்கள்தாம்.

அவர்கள் கூறும் விடயங்களை நம்பவோ ஏற்றுக்கொள்ளவோ நாம் தயாரில்லை.

விடுதலைப் புலிகள் முன்வைத்திருக்கும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபையை ஜே.வி.பி. ஒருபோதும் ஏற்றுக்கொள்ளாது. அதை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை நடத் துவது என்ற பேச்சுக்கே இடமில்லை.

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கிளர்ச்சியாளர் ஊடுருவலைத் தடுக்க ஈராக் - சிரியா இடையே உடன்படிக்கை

சிரியாவிலிருந்து கிளர்ச்சியாளர்கள் ஈராக்குக்குள் நுழைவதைத் தடுக்க வழிசெய்யும் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக ஈராக் தெரிவித்துள்ளது.

ஈராக்கிற்கும் சிரியாவுக்கும் இடையே பாலைவனம் ஊடான எல்லைப் பகுதியில் கிளர்ச்சியாளர்களின் நடமாட்டம் அதிகமான பகுதியாகக் கருதப்படுகின்றது.

ஈராக்கில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் பிரசன்னத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் கிளர்ச்சியாளர்கள் சிரியாவின் எல்லைப் பகுதியில் மறைந்துள்ளனர் என்றும்-

இவர்கள் ஈராக்கிற்குள் நுழைந்து தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொண்டுவிட்டு மீண்டும் சிரியாவுக்குள் தப்பிச் சென்று விடுகின்றனர் என்றும் -

அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையினர் குற்றஞ்சாட்டி வந்தனர்.

இந்நிலையில், ஈராக்கின் உதவிப் பிரதமர் பர்ஹாம், ஷலா, சிரியா அதிபர் பஷர் ஆசாத்துடன் இதுதொடர்பாகப் பேச்சு நடத்தினார். இதனையடுத்தே கிளர்ச்சியாளர்களின் ஊடுருவலைத் தடுக்க இரு நாடுகளும் உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தியுள்ளன.

இரு நாடுகளும் எல்லைப் பகுதியில் விசேட பாதுகாப்புப் படைகளை நிறுத்த இணங்கியுள்ளன என்றும்- இதன்மூலம் கிளர்ச்சியாளர்களின் ஊடுருவல் முற்றாகக் கட்டுப்படுத்தப்படும் என்றும்-

சிரியத் தலைநகர் டம்ஸ்கஸ்ஸில் வைத்து ஈராக் உதவிப் பிரதமர் தெரிவித்தார். ஆனாலும் ஈராக் - சிரியா இடையிலான சுமார் 600 கிலோ மீற்றர்கள் நீளமான எல்லைப் பகுதியைக் கண்காணிப்பது மிகவும் கடினமான காரியம் என்றே கருதப்படுகின்றது. இதேவேளை, சதாம ஆட்சி அகற்றப்பட்டபின் சிரியாவுக்குச் சென்ற ஈராக்கின் முதல் உயர்மட்டத் தலைவரான பர்ஹாம் ஷலா ஏற்படுத்தியுள்ள உடன்படிக்கை பிரச்சினையைத் தீர்ப்பதற்கான முதல் நடவடிக்கை என்றே கருதப்படுகின்றது. (ஒ)

## சார்க் அமைச்சர்கள் கூட்டம்

காத்மண்டு,ஜூலை13

சார்க் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் இஸ்லாமாபாத்தில் இம்மாதம் 20ஆம், 21ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. வறுமை ஒழிப்பு உள்ளிட்ட முக்கிய பொருளாதார பிரச்சினைகளை விவாதிப்பதே இக்கூட்டத்தின் முக்கிய நோக்கமாகும். (ஒ)

உலக அரங்கில்

# எதிர்க்கட்சித் தலைவரின் தயவை நாடுகிறார் இஸ்ரேலியப் பிரதமர்

ஜெருசலேம்,ஜூலை13

மேற்குக் கரையில் இஸ்ரேல் அமைத்து வந்த தடுப்புச் சுவர் சட்டவிரோதமானது என்று சர்வதேச நீதிமன்றம் தீர்ப்பளித்ததை அடுத்து இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷெரோனின் அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இதனைச் சமாளிக்க இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோன் எதிர்க்கட்சித் தலைவர் சிமென் பெரோசுடன் கூட்டு அரசு அமைப்பது தொடர்பாகப் பேச்சு நடத்தியுள்ளார்.

காஸாப் பகுதியில் இருந்து படைகளை விலக்கிக் கொள்ள கடந்த மாதம் ஷெரோன் திட்டமிட்டிருந்தார். இதற்கு எதிர்ப்புத் தெரிவித்த வலதுசாரி அணியினர், அவரது அரசுக்கு அதுவரை வழங்கி வந்த ஆதரவை விலக்கிக்கொண்டனர். இதனால் ஷெரோனின் அரசு பெரும்பான்மைப்பலத்தை இழந்தது.

இந்த நிலையில் தடுப்புச் சுவர் குறித்த சர்வதேச நீதிமன்றத் தீர்ப்பால் ஷெரோனின் அரசு நெருக்கடியை எதிர்நோக்க வேண்டி நேரிட்டுள்ளது.

இதனைச் சமாளிக்க பிரதமர் ஷெரோன் எதிர்க்கட்சித் தலைவரின் தயவை நாடியுள்ளார். இதற்காக பிரதமர் இல்லத்தில் இரு தலைவர்களும் சந்தித்து உரையாடினர்.

காஸாவில் இருந்து படைகளை விலக்கும் திட்டத்தை இரு தரப்பினரும் ஏற்பது-

கூட்டணி அரசில் அங்கம் வகிக்கும் தீவிர வலதுசாரிகளான தேசிய ஒன்றியக் கட்சியினரை அரசிலிருந்து வெளியேற்றுவது-

ஷெரோன் மீதான இரு ஊழல் வழக்குகளை கைவிடுவது - ஆகிய விடயங்கள் குறித்து இருவரும் ஆராய்ந்தனர் என்றும் கூறப்படுகின்றது. ஆனாலும் இது தொடர்பில் இறுதி முடிவு ஏதும் எட்டப்படவில்லை. (ஒ)

# தூத்துக்குடி - கொழும்பு கப்பல்சேவையை ஆரம்பிக்கத் தமிழக அரசு பின்னடிப்பு

## இந்திய அமைச்சர் குற்றச்சாட்டு

தூத்துக்குடி,ஜூலை13

தமிழகத்திலிருந்து கொழும்புக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தை தொடங்க தமிழக அரசு இதுவரை உரிய ஒத்துழைப்பை அளிக்கவில்லை என்று இந்தியக் கப்பல் போக்குவரத்துத்துறை அமைச்சர் டி.ஆர்.பாலு கூறினார்.

சேது சமுத்திரத் திட்டத்தை நிறைவேற்ற அமைக்கப்படும் சேது சமுத்திரத் திட்ட கழகத்துக்கு தூத்துக்குடித் துறைமுகம் தலைமை வகிக்கும் என்றார் அவர்.

தூத்துக்குடியில் செய்தியாளர்களிடம் இவற்றை அவர் தெரிவித்தார். சேது சமுத்திரத் திட்டத்திற்குத் தற்போது அனுமதிக்கப்பட்ட முதலீடு 2000 கோடிரூபா. இத்திட்டத்தை நிறைவுவேற்ற சேது சமுத்திரத்திட்டக் கழகம் உருவாக்கப்படும்.

இலங்கைக்குப் பயணிகள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க மத்திய அரசு முனைப்புடன் செயல்படுகின்றது. தமிழக அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காக கடந்த 3 வாரங்களுக்கு முன் மத்திய அரசு அதிகாரிகள் மாநில அரசு அதிகாரிகளுடன் பேச்சு நடத்தினர்.

ஆனால், மாநில அரசு இதுவரை உரிய ஒத்துழைப்பு அளிக்கவில்லை. ஒரு மாதத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கும் என்று நம்பிக்கை உள்ளது.

தமிழக அரசின் ஒத்துழைப்பு இல்லாமலும் தூத்துக்குடி - கொழும்புக்கு இடையே பயணிகள் கப்பல் போக்குவரத்தைத் தொடங்க முடியும் என்றார் அவர். (ஒ)

# இந்தியாவின் வடகிழக்கில் வெள்ளத்தால் பேரழிவு!

கவுகாத்தி,ஜூலை13

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் தற்போது பெரும் மழை பெய்து வருகின்றது. இதில் பல இடங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு உள்ளது. அசாம் மற்றும் பீகார் மாநிலங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளது.

அசாம் மாநிலத்தில் பிரம்மபுத்திரா ஆற்றில வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. ஆற்றின் கரையோரம் உள்ள நகர்களில் வெள்ளம் புகுந்து விட்டது.

அசாம் மாநிலத்தின் எல்லைப்புறம் அமைந்துள்ள பூட்டான் நாட்டில் குரிசோ ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு உள்ள அணையில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரும் வருவதால் வெளளச் சேதம் அதிகமாகி உள்ளது.

பீகார் மாநிலத்தின் பல பகுதிகளிலும் இதே போன்று வெள்ளச் சேதம் ஏற்பட்டுள்ளது. பீகாரின் வடபகுதியில் உள்ள தார் பங்கா மதுபானி, சிரோர், சித்தாமரி ஆகிய மாவட்டங்கள் வெளளத்தால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன.(ஒ)

---

# சாவகச்சேரி கடலேரியில் மீன்பிடிக்க நிபந்தனைகளுடன் படையினர் அனுமதி

தென்மராட்சி,ஜூலை13

2000ஆம் ஆண்டு இடம்பெற்ற இடப்பெயர்வுடன் தொழில்செய்ய அனுமதி மறுக்கப்பட்ட சாவகச்சேரி கடலேரியில் நேற்றுத் தொடக்கம் மீன்பிடிக்க படையினர் நிபந்தனைகளுடன் கூடிய அனுமதியை வழங்கியுள்ளனர்.

இதனையடுத்து நேற்று கடற்றொழிலாளர்கள் தமது தொழிலை ஆரம்பித்தனர்.

சாவகச்சேரி கச்சாய் வீதி லிகோரியார் தேவாலயத்திற்கு அருகில் உள்ள வீதி கடலேரிக்குச் செல்லும் பாதையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

கடலேரியில் சிவப்புக்கொடி நடப்பட்டுள்ள இடத்திற்கு அப்பால் செல்லக்கூடாது எனவும்-

எக்காரணம் கொண்டும் மறுகரைக்குச் செல்லக்கூடாது எனவும், கடற்கரையை அண்டிய பகுதிக்கு செல்லவேண்டாமெனவும் நபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

தொழில்செய்ய அனுமதி அட்டை வழங்கப்பட்ட தொழிலாளர்கள் கடலேரியில் காலை 6 மணிதொடக்கம் மாலை 6 மணிவரை கட்டுமரத்தில் சென்று மீன்பிடிக்கலாம் என்றும் - தெரிவிக்கப்பட்டுள்ளது.

521ஆவது படையணி கட்டளை அதிகாரியின் பணிப்பின் பேரில் நேற்றுக் காலை படையினர் சாவகச்சேரி புனித லிகோரியார் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகள், பங்குத்தந்தை அருட்திரு. ரவிச்சந்திரன் அடிகள் ஆகியோர் முன்னிலையில் போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்த வீதியினை திறந்து கடலுக்குச் செல்ல அனுமதித்தனர். (எ-117)

## சின்னமடு உற்சவம் குறித்த கலந்துரையாடல்

ஊர்காவற்றுறை,ஜூலை13

தீவுப்பகுதியின் பிரசித்திபெற்ற யாத்திரிகர் தலங்களில் ஒன்றான ஊர்காவற்றுறை சின்னமடுமாதா தேவாலயத்தின் வருடாந்த பெருந்திருவிழாவை முன்னிட்டு ஆலயத்திற்கு வருகை தரும் யாத்திரிகர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து கொடுப்பது சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள இக்கலந்துரையாடலில் சம்பந்தப்பட்டவர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் கேட்டுள்ளார்.

இம்மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்த மாதம் 5 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள இந்த ஆலயத்தின் வருடாந்த பெருவிழாவில் இவ்வருடம் பெரும் எண்ணிக்கையானோர் கலந்துகொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-16)

## இருவரும் ஒரே இடத்தில் பணிபுரிந்த போதிலும்

# பெண்மணியை வாகனத்தால் மோதியவர் தப்பி ஓட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

தனது மகளைப் பாடசாலையில் விட்டுவிட்டு வீதியைக் கடக்க முற்பட்ட பெண்ணை மோட்டார் சைக்கிளினால் மோதியவர் அவ்விடத்தில் நிற்காது தப்பி ஓட்டம் பிடித்தார்.

சம்பந்தப்பட்ட பெண்மணி நேற்றுக்காலை 8 மணியளவில் யாழ். புனித ஜோன் பொஸ்கோ பாடசாலையில் தமது மகளை விட்டுவிட்டு வீதியோரம் நின்ற முச்சக்கர வண்டியில் ஏறுவதற்காக வீதியைக் கடக்க முற்பட்டபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

'ஸ்பிலிண்டர்' ரக மோட்டர் சைக்கிளில் வேகமாக வந்த ஒருவரே மோதினார் என்றும் - பெண்மணி உருண்டு வீழ்ந்து அவலப்பட்டுக்கொண்டிருந்த வேளை மோதிய நபர் எவ்வித உதவியும் செய்யாமல் மனிதாபிமானம் சிறிதும் இல்லாமல் அங்கிருந்து வேகமாக ஓடித்தப்பிவிட்டார் என்றும் - கூறப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் திருமதி சொரூபா சுபசீலன் (வயது-34) என்பவரே மோதப்பட்டவராவார். அவருக்குத் தலையிலும் காலிலும் காயங்கள் ஏற்பட்டிருப்பதாக மருத்துவ பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக யாழ்.பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. பொலீஸார் விசாரணைகளை நடத்தி மாலையில் சம்பந்தப்பட்ட மோட்டார் சைக்கிள் ஓட்டியைப் பிடித்தனர். அவரது வாகனம் மற்றும் பத்திரங்களைப் பறிமுதல் செய்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்தி பெண்மணியை மோதியவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் பெஞ்ஜமின் றஞ்சன் என்று பொலீஸ் வட்டாரங்களில் இருந்து அறியவந்தது. (அ-4-10-15)

# புதியவகைக் காய்ச்சல் காரைநகரில் பரவுகிறது!

காரைநகர்ப் பிரதேசத்தில் புதிய வகைக் காய்ச்சலினால் பலர் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, ஆறுபேர் நெருப்புக்காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளமையும் பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இத்தகைய காய்ச்சலினால் பீடிக்கப்பட்ட சுமார் நூறு பேர் வரையில் நேற்று மட்டும் காரைநகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். இவர்களில் 14பேர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக அனுப்பிவைக்கப்பட்டனர். இந்தக் காய்ச்சலை மேலும் பரவவிடாது தடுப்பதற்குரிய நடவடிக்கைகளில் காரைநகர் பிரதேச பொதுச்சுகாதாரப் பரிசோதகர் ச.பரமேஸ்வரன் தலைமையிலான குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, காரைநகர் மத்தி கங்கைமதி சனசமூக நிலையத்தில் அப்பகுதிக் கிராம அலுவலர் எஸ்.கே.சிவலிங்கம் தலைமையில் நடைபெறறது. இதில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர், குடும்பநல உத்தியோகத்தர்கள், சுகாதாரத் தொண்டர்கள ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர்.

தொடர்ந்து, ஏனைய கிராமங்களிலும் இவ்வாறான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தவுள்ளதாக காரைநகர்ப் பகுதிப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தார். (எ-4-10-73)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூலை13

தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் ஜெகஜோதி அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா இன்று செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து ஒன்பது தினங்கள் நடைபெறவுள்ளது.

உற்சவ நாள்களில் தினமும் மாலை 7 மணிக்கு விசேட சொற்பொழிவு இடம்பெறும். (10-173)

★ ★ ★

வலி.தெற்கு,ஜூலை13

உடுவில் சுற்பொக்கணைப்பதி ஸ்ரீவீரகத்தி விநாயகர் ஆலய மஹாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 8.24 மணிதொடக்கம் 10.13 மணி வரையுள்ள சுபவேளையில் நடைபெறவுள்ளது.

பரிவார மூர்த்திகளான சுப்பிரமணியர், பைரவர், சண்டேஸ்வரருக்கும் கும்பாபிஷேகம் நடைபெறும்.

கடந்த வியாழக்கிழமை கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன.

இன்று செவ்வாய்க்கிழமை காலை 8மணி தொடக்கம் மாலை 4மணிவரை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இடம்பெறும். (10-152)

நவாலி,ஜூலை13

சங்குவேலி பூவரசடி அருள் ஞான விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை புதன்கிழமை காலை 8.28 மணிமுதல் 10.13 மணி வரையான சுபநேரத்தில் இடம்பெறும்.(10-100)

★ ★ ★

குருநகர்,ஜூலை13

குருநகர், பாங்சால் வீதி கார்மேல் மாதா ஆலயத் திருவிழா கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

எதிர்வரும் 15ஆம் திகதி காலை 6மணிக்கு நற்கருணை ஆராதனையும், மறுநாள் காலை 7மணிக்குத் திருநாள் திருப்பலியும் நடைபெறும். (10-51-201)

★ ★ ★

குருநகர்,ஜூலை13

குருநகர் புனித யாகப்பர் ஆலய வருடாந்தத் திருவிழா எதிர்வரும் 16ஆம் திகதி காலை 6மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 24ஆம் திகதி சனிக்கிழமை மாலை நற்கருணை ஆராதனையும்; மறுநாள் காலை 7மணிக்குத் திருநாள் திருப்பலியும் இடம்பெறும். (10-51-201)

உதயன்

# மீண்டும் யுத்தமா...?

"இடைக்கால நிர்வாகம் என்ற பேச்சே பேசக் கூடாது. விடுதலைப் புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கவும் கூடாது. அவ்வாறு புலிகளுக்கு இடைக்கால நிர்வாகத்தை வழங்கும் முயற்சிகளுக்கு விட்டுக் கொடுக்க மாட்டோம், அதற்கு அனுமதிக்கவும் மாட்டோம்"

- இப்படி அடித்துக் கூறியிருக்கின்றார் ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க., சிங்கள வார இதழ் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெட்டத் தெளிவாகச் சூளுரைத்திருக்கின்றார்.

இதேவேளை, இக்கருத்தை வலியுறுத்தும் வகையில - 'இடைக்கால நிர்வாகம் விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படக் கூடாது' எனத் தெரிவிக்கும் - சுவரொட்டிகளை மும்மொழிகளிலும் தலைநகர் மற்றும் பிற தென்னிலங்கைப் பிரதேசங்களால் பரவலாக ஒட்டியிருக்கின்றது ஜே.வி.பி.

மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் வெளியான கையோடு - தேர்தலுக்கு அடுத்த நாள் இரவே - இந்தச் சுவரொட்டிகள் முளைத்திருப்பதுதான் கவனிக்கத்தக்க விடயம்.

அதாவது, தேர்தல் சமயத்திலேயே இந்தச் சுவரொட்டிகளைத் தயார் செய்துவைத்து முடிவுகள் வெளியானதும் அவை ஒட்டப்பட்டிருக்கின்றன.

குறிப்பாகச் சொல்வதானால், இந்தச் சுவரொட்டிகளை ஒட்டும் நடவடிக்கை கூட ஜே.வி.பியின் ஒரு நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு பகுதிதான்.

அது என்ன அந்த நிகழ்ச்சித் திட்டம்?

மாகாணசபை வெற்றிப் பெருமிதத்துடன் அரசுத் தலைவி சந்திரிகா குமாரதுங்க சமாதானப் பேச்சு என்ற அமைதி நடவடிக்கையை நோக்கி நகர முற்படுவார். அதற்கு உரிய தடுக்குப் போடவேண்டும் என்பதுதான் அந்த நிகழ்ச்சித் திட்டம். உரிய காய்களை, உரிய முறையில் நகர்த்தி, அந்தத் திட்டத்தைக் கனகச்சிதமாக நிறைவுசெய்து வருகிறது ஜே.வி.பியும் அதனோடு சேர்ந்த சிங்களப் பேரினவாதமும்.

சந்திரிகா அம்மையாரின் சமாதான நகர்வுகளுக்கு உரிய வழிகளில் - உரிய முறைகளில் - தடைக்கல்லைப் போட்டு, தடுப்புப் போட்டு மறித்து வருகின்றது ஜே.வி.பி.

ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்ற பேராசையால் பேரினவாதக் கூட்டை அணைத்துக் கொண்ட ஜனாதிபதி குமாரதுங்க, அதை விடவும் முடியாமல், சேர்த்துக் கொண்டு ஆட்சியைக் கொண்டிழுக்கவும் முடியாமல் தவிக்கிறார். ஒருவகையில் பார்த்தால் இப்பத்தியில் நாம் முன்னர் குறிப்பிட்டது போன்று 'ஆப்பிழுத்த குரங்கின் நிலைதான்' அவருடையது.

தாம் விரித்த வலைக்குள் தன்னையும் சிக்க வைத்து, தனது கட்சியையும் சிக்க வைத்தது மட்டுமல்ல, முழு நாட்டையும் சிக்கவைத்து, அதன்மூலம் நாட்டின் எதிர்காலத்தையே கேள்விக்குள்ளும் அழிவு, ஆபத்துக்குள்ளும் அவர் தள்ளியிருப்பதுதான் துரதிர்ஷ்டம்.

ஒருபுறம் சமாதான எத்தனங்களை அவர் கேள்விக்குள்ளாக்கியிருக்கின்றார் என்றால் மறுபுறம் அவரும் அவரது அரசும், அவரது படைகளும் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் நாட்டின் அமைதிச் சூழலையே பேராபத்துக்குள் மூழ்கடிக்கச் செய்திருக்கின்றன. இரண்டரை ஆண்டு காலம் தாக்குப்பிடித்த யுத்த நிறுத்தம் எந்நேரமும் முறியலாம் என்ற அச்சநிலை உருவாகிவருகின்றது.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பி.பி.ஸிக்கு வழங்கிய பேட்டியில் இந்நிலைமை ஏற்பட்டிருப்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

"கடந்த இரண்டரை வருட காலமாகக் கட்டியெழுப்பிய நம்பிக்கையைச் சீர்குலைத்து, நாட்டை யுத்த நெருக்கடியை நோக்கி இந்த அரசும், அரசுப் படைகளும் தள்ளிக்கொண்டிருக்கின்றன என்ற எண்ணத்தையே அண்மைக்கால நிகழ்வுகள் எமக்கு ஊட்டுகின்றன".

- என்று தெரிவித்துள்ள தமிழ்ச்செல்வன், யுத்த நிறுத்த ஒப்பந்தம் தொடர்பான இணக்க நிலைமை முன்னெப்போதும் இல்லாத மோசமான கீழ்நிலைக்கு வந்திருப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்போது பொதுத்தேர்தலை அடுத்து மாகாண சபைத் தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குள் பேரினவாத ஜே.வி.பியின் பிடி மேலும் இறுகியிருக்கின்றது. தேர்தல் முடிவுகள் அதைத் துலாம்பரப்படுத்துகின்றன.

இனிமேல், விட்டுக்கொடுப்புகளோடு - நெகிழ்வுப் போககோடு - சமாதான முயற்சிகளில் ஜனாதிபதி குமாரதுங்க ஈடுபடுவார் என்பது துர்லபமே.

எனவே, விரும்பியோ, விரும்பாமலோ நாட்டின் மீது மீண்டும் ஒரு யுத்தம் திணிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும் போலவே படுகின்றது.

நாடாளுமன்றில் பெரும்பான்மைப் பலத்தோடு அமைதி முயற்சிகளில் ஈடுபட்ட ஐ.தே.மு.அரசைக் கலைத்து, பேரினவாத சக்திகளுடன் கூட்டுச் சேர்ந்து, அரைகுறை அரசு ஒன்றை அமைத்ததன் மூலம் ஜனாதிபதி, இந்த நாட்டுக்குச் சாதித்துக் கொடுத்தது இதைத்தான்!

---

### மக்கள் வங்கிக் கடன் தொடர்பில்

# விவசாயிகளுக்குச் சலுகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளவும்

## ஆளுநருக்கு கூ.சங்க உறுப்பினர் மகஜர்

அச்சுவேலி,ஜூலை13

"25 வருடங்களுக்கு முன்னர் மக்கள் வங்கி விவசாயிகளுக்கு வழங்கிய கடன்கள தொடர்பாக 2001ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு சலுகைகள் வழங்க நடவடிக்கை எடுக்கவும்."

- இவ்வாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு அச்சுவேலி பலநோ.கூட்டுறவுச் சங்க பொதுச்சபை உறுப்பினர் சி.கிருஷ்ணபிள்ளை மகஜர் அனுப்பிவைத்துள்ளார்.

2001ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம் விவசாயக் கடன் தொகையில் 25 வீத கடனைச் செலுத்தும் விவசாயிகளுக்கு 75வீதக் கடன் தொகையை இரத்துச் செய்து கடனில் இருந்து விடுவிக்க அனுமதி அளிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த நடைமுறையை யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தாமல் இழுத்தடிப்பதால் நூற்றுக்கணக்கான விவசாயிகள் சமகாலத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய கடன் சலுகைகளைப் பெறமுடியாதுள்ளனர். அவர்கள் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் செயற்பாடுகளிலும் கலந்து கொள்ளமுடியாமல் உள்ளனர்.

இதனைச் சுட்டிக்காட்டி விரிவான மகஜரை ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ள சி.கிருஷ்ணபிள்ளை, சம்பந்தப்பட்ட கடன் விதிவிலக்குத் தொடர்பான ஆவணங்களையும் மகஜருடன் இணைத்து ஆளுநருக்கு அனுப்பிவைத்துள்ளார்.

1977ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் அதற்கு முன்னரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு மக்கள் வங்கி வழங்கிய கடனில் ஒருகோடியே 90 லட்சம் ரூபாவும் அதற்கான வட்டியும் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஒ-11)

# சமாதானச் சூழலில் இடம்பெறுகின்ற கொலைகள் சர்வதேசக் குற்றங்கள்

### வவுனியா நீதிவான் தெரிவிப்பு

சமாதானச் சூழலில் இடம்பெறுகினற படுகொலைகள் சர்வதேசக் குற்றங்களாகக் கருதப்படுகின்றன. ஆகவே, இவற்றைத் தடுக்கத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

- இவ்வாறு வவுனியா மாவட்ட நதிவான எம்.இளஞ்செழியன் தீர்ப்பொன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

வவுனியா பிரதேசத்தில் இடம்பெற்று வரும் படுகொலைகளைத் தவிர்ப்பதற்காக இரவு நேர ரோந்து நடவடிக்கைகளை அதிகரிக்குமாறும் -

வவுனியா மாவட்ட நீதிவான், வவுனியா சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகருக்கு இத் தீர்ப்பில் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா பட்டக்காடு பகுதியில் இனந் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியான கனகசபை தேவராஜாவின் மரணவிசாரணையின் முடிவில் அளிக்கப்பட்ட தீர்ப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சமாதானச் சூழல் மற்றும் யுத்தச் சூழலின்போது ஏற்படுகின்ற இத்தகைய படுகொலைகள் சர்வதேச ரீதியிலான குற்றச செயல்கள் எனக் கருதப்படுகின்றன என்றும் - இக்கொலைகள் தொடர்பாகச் சர்வதேச நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படலாம் எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது என்றும் - நீதிவான் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இவ்வாறான கொலைகளைப் போர்நிறுத்தம் நடைமுறையில் உள்ள போது தொடர்வதைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலஸாருக்கு அவர் உத்தரவிட்டுள்ளார்.(ஒ-201)

### கலை ஊர்வலம், கலைஞர் சங்கமம்

# நல்லூரில் மூன்று நாள்கள் பாரம்பரியக் கலைவிழா!

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் பத்தாவது ஆண்டுநிறைவையொட்டி மாபெரும் கலைவிழா ஒன்று நடத்தப்படவிருக்கிறது.

நாளைமறுதினம் வியாழக்கிழமை தொடக்கம் மூன்று நாள்களுக்கு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெறவுளள இந்தக் கலைநிகழ்வுகளில் மூத்த கலைஞர்கள் 20 பேர் கௌரவிக்கப்பட உள்ளனர். மேலும், கழகம் நடத்திய இசைநாடக கிராமிய நடனப் போட்டிகளில் வெற்றி பெற்ற கலைஞர்கள், நாடக மன்றங்கள், பாடசாலைகளுக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

இறுதி நாள் நிகழ்வில் கிராமியக் கலை ஊர்வலம் நடைபெற உள்ளது. நல்லூர் சட்டநாதர் கோயில் முன்றிலில் ஆரம்பித்து நல்லூர் கந்தசுவாமி கோயிலை வந்தடையவுள்ள இந்த ஊர்வலத்தில், கிராமியக் கலைநிகழ்ச்சிகள் இடம்பெறவிருப்பதாகக் கழகச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்த ஊர்வலத்தில் கரகம், காவடி, கும்மி, கோலாட்டம், தவில், நாதஸ்வரம், உடுக்கு, குதிரையாட்டம் போன்ற மற்றும் பல கிராமிய நடனங்களும் இடம்பெறவுளளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வுகளில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசியல் துறையினர், பல கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்துடன் நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த பாரம்பரிய கலைஞர்கள் பலர் இதில் சங்கமிக்கவுள்ளமை சிறப்பம்சமாகும்.

கடந்த மாதம் பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட பாரம்பரிய நாடக, கலைப் போட்டிகளில் வெற்றிபெற்ற நிகழ்வுகள் இதில் மேடையேற்றப்படவிருக்கின்றன. சிறப்புரைகளும் இடம்பெறும். (4-88)

# கவனிப்பாரற்ற நிலையில் நவீன மருத்துவ உபகரணங்கள்

குருநகர்,ஜூலை13

யாழ். மாவட்டத்தில் இயங்கிவரும் சில அரசினர் வைத்தியசாலைகளில் அநேக மருத்துவ உபகரணங்கள் பயன்படுத்தப்படாது உள்ளன என அண்மையில் இவ் வைத்தியசாலைகளில் இடம்பெற்ற சோதனைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

குடாநாட்டில் சேவையாற்றிய வெளிநாட்டு மருத்துவக் குழுக்கள் தாம் பயன்படுத்திய பல மருத்துவ உபகரணங்களைத் தமது சேவை முடிவுற்றதும் வைத்தியசாலைகளுக்கு அன்பளிப்பாக வழங்கிச் சென்றன. இந்த மருத்துவ உபகரணங்கள் நவீன வகையானவையாகும். இவற்றில் பெரும்பாலானவை தற்போது பயன்படுத்தப்படாதுள்ளன என்று கூறப்படுகிறது.

மேலும் சில வைத்திய நிலையங்களில் உள்ள சில பெறுமதிமிக்க உபகரணங்கள் அவற்றைக் கையாளத் தகுதியான வைத்திய நிபுணர்கள் இல்லாத காரணத்தால் பாவனையற்றும் காணப்படுகின்றன.

எனவே, இந்த மேலதிக உபகரணங்களைத் தகுதியான வைத்தியசாலைகளுக்கு இடமாற்றலாம் என்றும் -

அத்துடன், இந்த உபகரணங்களைப் பாவிக்கக்கூடிய தகுதியான மருத்துவ நிபுணர்களை அரசு நியமித்து நோயாளர்கள இச்சேவைகளைப் பெற்றுக்கொள்ளும சூழ நிலையை உருவாக்கவேண்டும் எனவும் -

இந்த வைத்தியசாலைகளின் பொறுப்பதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(ஒ-51)

**நாளை**

ஆனி 30
புதன்கிழமை
(14.07.2004)
திதி : துவாதசி
பகல் 11.39 வரை.
நட்சத்திரம்: ரோகிணி
பகல் 02.23 வரை.
சுபநேரம்: 04.30 - 06.00
ராகுகாலம்: 12.00 - 01.30
(பழைய நேரப்படி)

# மணல் ஏற்றிய உழவு இயந்திரம் பொதுமக்களால் தீக்கிரை

அரியாலை,ஜூலை13

கொழும்புத்துறை கிழக்கு நெடுங்குளம் காட்டுப்பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்ட உழவு இயந்திரம் (டிராக்டர்) ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இரவு பொதுமக்களால் தீக்கிரையாக்கப்பட்டது.

இந்த உழவு இயந்திரத்தில் சட்ட விரோதமாக மணலை சிலர் ஏற்றிக் கொண்டிருந்தனர் என்றும் -

இப்பகுதி மக்கள் விரைந்து சென்ற வேளை மணல் ஏற்றியோர் உழவு இயந்திரத்தைக் கைவிட்டுத் தப்பியோடி விட்டனர் என்றும் -

ஆத்திரம் அடைந்த மக்கள் உழவு இயந்திரத்தைத் தக்கிரையாக்கினர் என்றும் - தெரிவிக்கப்பட்டது.

இத்தகைய சம்பவம் இரண்டாவது தடவையாக இப்பகுதியில் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-17)

# பிப்பிலி மயானத்தில் இடம் ஒதுக்க பெந்துகோஸ் சபை கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை13

மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்தின் அருகில் 'பெந்துகோஸ்து' சபையைச் சேர்ந்தவர்கள் நல்லடக்கம் மேற்கொள்ள அனுமதி கேட்டுள்ளனர்.

இலங்கை பெந்துகோஸ்து சபையினர் தமது சபையைச் சேர்ந்தவர்கள் இறக்கும் போது அவர்களது உடலங்களை அடக்கம் செய்யத் தமக்கு இந்த மயானத்தில் இடம் ஒதுக்கித் தருமாறு வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேசசபை செயலாளர் பி.விகடரிடம் அனுமதி கேட்டுள்ளனர்.

இதுகுறித்துப் பொதுமக்கள் அபிப்பிராயம் பத்திரிகை விளம்பரம் மூலம் பெறப்பட்டு எவ்வித எதிர்ப்பும் இல்லாத பட்சத்தில் மயானத்தில் இடம் வழங்குவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்று பிரதேச சபைச் செயலாளர் பதிலளித்துள்ளார். (ஒ-185)

**உதயவாக்கு**


ஒரு நிமிடம் கோபத்தை அடக்கினால் ஒரு நாள் துன்பத்தைத் தவிர்க்கலாம்.

வடக்குக் கிழக்கு மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

# சர்வதேச தரம் மிக்க

# TOSHIBA

# தற்போது உங்கள் நகரில்




**காரியாலய உபகரணங்கள் பழுதுபார்க்க - பராமரிக்கக் காலமோ பணமோ விரயம் இல்லை.**

சர்வதேச தரம்மிக்க Toshiba Digital / Analog Copiers மற்றும் Faxes, Business Telephone Systems, Note Books
என்பனவற்றைப் பராமரிக்கவும், பழுதுபார்க்கவும் நீங்கள் அங்கும் இங்கும் அலைய வேண்டிய அவசியம் இல்லை.
இதை இலகுவாகவும் மிகச் சௌகரிகமாகவும் உங்கள் சொந்தப் பிராந்தியத்திலேயே செய்து கொள்ளலாம்.
விற்பனைக்குப் பின்னரான சேவை மற்றும் ஒறிஜினல் டோணர்கள், உதிரிப் பாகங்கள் அனைத்தும் ஒரே கூரையின் கீழ்

விசேட பயன்கள்

- அறிவித்து 48 மணித்தியாலத்தினுள் தொழில் நுட்பவியலாளர் உங்கள் இடம் வந்தடைவார்.
- பராமரிப்பு அல்லது பழுதுபார்த்தல் முடியும் வரை. தற்காலிகமாக உங்களுக்கு மெஷின் ஒன்று தரப்படும்.
- உதிரிப்பாகம் பொருத்தும் போது தொழில்நுட்ப வேலைக்குக் கட்டணம் இல்லை.
- மிகக் குறைந்த பராமரிப்புச் செலவு.

**விற்பனை முகவர்கள்**

TOSHIBA FROM JOHN KEELLS

John Keells Group

**யாழ்ப்பாணம்:** I.I.S. ஒ.ஃபீஸ் ஒட்டோமேசன், 360/3, பிரதான வீதி, யாழ்ப்பாணம். தொ.பேசி 021 2222831
Viknesh - 0777 271225 Schokman - 071 6146041

**திருகோணமலை:** ட்ரிங்கோ ஸ்டேசனரீஸ், 31, மூன்றாம் குறுக்கு வீதி, திருகோணமலை. தொ.பேசி 026 2223071
பக்ஸ்: 026 2223071 Kirishnakumar - 0777 890915 / 026 2222060 Schokman - 071 6146041

**மட்டக்களப்பு:** மயூரா பிஸினஸ் சொலுசன், 230, திருமலை வீதி, மட்டக்களப்பு. தொ.பேசி 065 2224821
Yohan - 065 222482 Schokman - 071 6146041

# தென்மராட்சி தெற்கு வயல்களில் இம்முறை விவசாயத்துக்கு வாய்ப்பு

தென்மராட்சி,ஜூலை13

தென்மராட்சி தெற்குப் பகுதியில் வெடிப் பொருள்கள் அகற்றப்பட்ட ஆயிரம் ஏக்கர் நெல்வயல்கள் விரைவில் படையினரால் பிரதேச செயலரிடம் கையளிக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகின்றது.

அண்மையில் இப்பகுதிக்கு விஜயம் செய்த வடபகுதிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சிசில் சந்திரபாலவை இப்பகுதி விவசாய சம்மேளனப் பிரதிநிதிகள் சந்தித்தனர். காலபோக நெற்செய்கை மேற்கொள்ள அனுதிக்கப்படுவதாகக் கடந்த வருடம் அறிவிக்கப்பட்ட ஆயிரம் ஏக்கர் நெற்காணியில் இவ்வருடம் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்குமாறு அப்போது விவசாயப் பிரதிநிதிகள் கட்டளைத் தளபதியிடம் கோரினர். அத்துடன், மறவன் புலவில் விடுவிக்கப்பட்ட பகுதியில் நெற்செய்கை மேற்கொள்ள அனுமதிக்குமாறும் அவர்கள் கோரியிருந்தனர்.

இதனையடுத்து வெடிப்பொருள்கள் அகற்றப்பட்ட ஆயிரம் ஏக்கர் நெற்காணியினைப் பிரதேச செயலரிடம் கையளிக்குமாறு உத்தரவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

நாவற்குழி - கேரதீவு வீதியின் வடக்குப் புறமாகப் புகையிரத வீதிவரைக்கும் நெற்செய்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகவும் -

நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீதியும், நுணாவில் கிழக்கு வைரவர் கோயிலுக்கு அருகில் படையினரால் அமைக்கப்பட்ட வீதியும் - நெற்செய்கையாளர்களினால் பயன்படுத்தப்பட முடியுமெனவும்

- தெரிவிக்கப்பட்டது. (ஒ-117)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### பாடசாலை பெயர்வளைவு: மக்கள்வங்கி அன்பளிப்பு

தென்மராட்சி,ஜூலை13

மக்கள் வங்கியின் 43ஆவது ஆண்டு நிறைவையொட்டி சாவகச்சேரி மக்கள் வங்கியினர் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்துக்கு 43 ஆயிரம் ரூபா செலவில் வித்தியாலய பெயர் வளைவினை அன்பளிப்பாக வழங்கியுள்ளனர் என்று வித்தியாலய அதிபர் தெரிவித்தார். (4-117)

# சிற்றாறாக மாறும் நவாலி பிரதானவீதி

நவாலி,ஜூலை13

நவாலி சென்.பீற்றஸ் தேவாலயத்திற்கு முன்பாகவுள்ள பிரதான வீதி மழை பெய்தால் சிற்றாறுபோல் காட்சியளிக்கின்றது.

இவ்வீதி பலத்த சேதமடைந்து பாரிய கிடங்குகள் ஏற்பட்டுள்ளதால் சிறிய மழை பெய்தாலும் வெள்ளம் அக்கிடங்குகளுக்குள் தேங்கி நின்று வீதியை மூடுகின்றது. இதனால், அவ்வழியே செல்லும் மக்கள் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர்.

இது விடயமாக நாவாலி கிழக்கு கிராம அபிவிருத்திச் சபையினர் சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடிதங்களை அனுப்பியும் இதுவரை இதனைச் சீர்செய்ய நடவடிக்கை எடுக்க முன்வரவில்லையென்று கவலை தெரிவிக்கப்படுகிறது. (ஒ-100)




மானிப்பாய் றோட்டரக்ட் கழகத்தின் அனுசரணையுடன் 'கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்' மற்றும் ஐ.பி.ஏ. எஸ். ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்திய கணனி, தொழில் வழிகாட்டி குறித்த கருத்தரங்கு அண்மையில் மானிப்பாய் பிரதேசசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் கலந்துகொண்ட மாணவி ஒருவருக்கு "கொம்பியூட்டர் எக்ஸ்பிரஸ்" நிறுவன இயக்குநர் றொபின் செல்வகுமார் சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (9)

# யாழ்.வைத்தியசாலையில் பாதுகாப்புப் பணி தீவிரம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பணி பலப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்.போதனாவைத்தியசாலை வார்ட்டில் பார்வையாளர் நேரத்தில் கூரிய ஆயுதமொன்றினால் நோயாளியுடன் உதவியாக இருந்தவர் ஒருவர் குத்திக் காயப்படுத்தப்பட்ட சம்பவத்தையடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய - வைத்தியசாலை நிர்வாகத்தின அறிவுறுத்தலுக்கிணங்க - பார்வையாளர் நேரத்தில் வைத்தியசாலைக்குள் செல்லும் அத்தனை பேரும் பாதுகாப்பு உத்தியோகத்தரின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்பே அனுமதிக்கப்படுகின்றனர். இதற்கு பொதுமக்களை ஒத்துழைக்குமாறு மருத்துவமனை நிர்வாகம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ-15)

# ஊர்காவற்றுறைப் பகுதியில் சிறந்த ச.ச.நிலையம் தெரிவு

ஊர்காவற்றுறை,ஜூன்13

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையினால், உள்ளூராட்சி [illegible] த்தை முன்னிட்டு சனசமூக நிலையங்களின் செ[illegible]றந்திறனை ஊக்குவிக்கும் முகமாகச் பிர[illegible] பாகச் செ[illegible]ற்பட்டு வரும் சனசமூக நிலையத்தினை தெரிவுசெய்து கௌரவிப்பதுடன் [illegible]ச்சும் பெறுமதியான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இதுதொடர்பில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தருடன் ஊர்காவற்றுறை பிரதேசசபை அதிகாரிகளும் இணைந்து பிரதேச சபை உபஅலுவலக ரீதியாக சனசமூக நிலையங்களுக்கு நேரடியாகச் சென்று மதிப்பீட்டினை மேற்கொள்வர்.

இந்த மதிப்பீடு இன்று எழுவைதீவிலும் நாளை நாரந்தனையிலும், 15ஆம் திகதி அனலைதீவிலும், 16ஆம் திகதி காரைநகரிலும், 17ஆம் திகதி ஊர்காவற்றுறை பிரதேசத்திலும் மேற்கொள்ளப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சனசமூக நிலையங்களின் நிர்வாகிகள் இவற்றிற்கு பூரண ஒத்துழைப்பு வழங்கியுதவுமாறு ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் கு.கணேசலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ-16)

# பிறப்பு, திருமணப் பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை

நவாலி,ஜூலை13

உயரப்புலம் ஜே - 132 கிராமசேவையாளர் பிரிவில் உள்ளவர்களில் இதுவரை தமது பிறப்புப் பதிவு, திருமணப்பதிவு என்பவற்றைச் செய்யாதோர் கிராமசேவை அலுவலர் ஊடாக இப்பதிவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆகவே, இப்பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் உடன் தம்முடன் தொடர்புகொள்ளுமாறு உயரப்புலம் கிராமசேவையாளர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா கேட்டுள்ளார். (ஒ-100)

### சங்கானை வயல்களில் பாதீனியம் பரவியது

வட்டுக்கோட்டை,ஜூலை13

சங்கானை மண்டிகைக் குளத்தை அண்டியுள்ள வயல்நிலங்களுக்குள் பாதீனியக் களைகள் பரவியுள்ளன.

இப்பகுதியில் அண்மைக்காலத்தில் விவசாயப் பகுதியினரால் பாதீனியம் அழிக்கப்பட்டது. ஆனாலும் உரிய பருவத்தில் இக்களை அழிக்கப்படாமையாலேயே வயல்நிலங்களுக்குள்ளும் அது பரவியுள்ளது.

காலபோக நெற்செய்கைக்கு முன்னர் இப்பாதீனியக் களைகள் அழிக்கப்படாவிடில் மேலும் பரவி எதிர்காலத்தில் பயிர்ச்செய்கைக்கு அச்சுறுத்தலாக அமையும் என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். (ஒ-161)

# உள்ளூராட்சிச் சபைகளில் சுற்றாடல் அதிகாரக் குழுக்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்.மாவட்டத்தின் 16 உள்ளூராட்சிச் சபைகளிலும் மத்திய சுற்றாடல் உயர் மட்ட அதிகாரக் குழுக்கள் உருவாக்கப்பட உள்ளன.

இதற்கான நடவடிக்கையை மத்திய சுற்றாடல் அதிகாரசபை உப அலுவலக அதிகாரி ரி.திருக்குமரன் மேற்கொண்டுள்ளார்.

இந்த உயர்மட்டக் குழு 5பேரைக் கொண்டதாகவும் பரிசோதனைக் குழு 4 பேரைக் கொண்டதாகவும் இருக்கும்.

உயர்மட்டக் குழுவுக்கு உள்ளூராட்சிச் சபையின் செயலாளர் தலைவராகவும் - சுற்றாடல் அதிகார சபையின் மாவட்ட அலுவலர் செயலாளராகவும் உள்ளூராட்சிச் சபையின் திட்டமிடற் பிரிவுப் பொறுப்பாளரான உள்ளூராட்சி உதவியாளர் திட்டமிடலாளராகவும் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி, வனவள அல்லது விவசாயத் திணைக்கள அதிகாரி ஒருவர் உட்பட 5 பேர் உறுப்பினர்களாகவும் பொறுப்பு வகிப்பர்.

பரிசோதனைக்குழுவில் மத்திய சுற்றாடல் அதிகாரசபை அலுவலரும், தொழில்நுட்ப அலுவலரும், பொது சுகாதார பரிசோதகரும், வருமான மேற்பார்வையாளர்களும் அடங்குவர்.

இதன்படி பல உள்ளூராட்சி சபைகளிலும மத்திய சுற்றாடல் உயர்மட்ட அதிகாரக் குழுவை நியமனம் செய்து இம் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் "மத்திய சுற்றாடல் அதிகார சபை, உப-பிராந்திய அலுவலகம், கச்சேரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு உப-அலுவலக அதிகாரி ரி.திருக குமரன் கேட்டுள்ளார். (ஒ-185)

### பிளாட்டிலிருந்து தவறி வீழ்ந்து காயம்

மாடிக்கட்ட வேலைகளைப் பார்வையிட்டவர் மேலிருந்து தவறிவீழ்ந்து காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கடந்த சனிக்கிழமை காலை கொடிகாமத்தில் இடம்பெற்றது.

தலையில் காயமடைந்த இப்பகுதியைச் சேர்ந்த சண்முகதாஸ் (வயது 48) என்பவரே சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-117)

### மீதிகளைச் சரிபார்க்கலாம்

யாழ்ப்பாணம்,ஜூலை13

தென்மராட்சி கிழக்கு, கொடிகாமம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிராமிய வங்கியில் கடந்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதிக்கும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதிக்கும இடைப்பட்ட காலப்பகுதிக்கான கணக்காய்வுகள் தற்போது நடைபெறுகின்றன.

மேற்படி வங்கியின் வாடிக்கையாளர்கள் கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரையான மீதிகளை இன்று திங்கட்கிழமை முதல் எதிர்வரும் 17ஆம் திகதிவரையான காலப்பகுதிக்குள் வேலை நேரத்தில் சரிபார்த்து உறுதிப்படுத்தலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (-10-201)

### விபத்தில் காயம்

மீசாலைப் பகுதியில் இரு மோட்டார் சைககிள்கள் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் மோட்டார் சைக்கிள் ஓட்டிக்குக் கால் முறிந்த சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

மந்துவிலைச் சேர்ந்த கே.சந்திரகாசன் (வயது 52) என்பவர் கால்முறிந்து காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (4-117)



யாழ். நகர் கிழக்கு சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் கடன் வழங்கும் நிகழ்வின் ஆரம்ப வைபவம அண்மையில் நடைபெற்றபோது, யாழ்.பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பயனாளி ஒருவருக்குக் கடன் வழங்குகிறார் அருகில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ம.கியுமன், வங்கிக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் அ.யேசுதாசன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்: குருநகர்ச் செய்தியாளர்)

# 'டிஸ்ரெம்பர்' நோயால் நாய்கள் பலவும் இறப்பு

வட்டுக்கோட்டை,ஜூலை13

'டிஸ்ரெம்பர்' எனப்படும் நோயினால் பல நாய்கள வலிகாமம் மேற்குப் பகுதியில் இறந்துள்ளன.

வெப்ப காலங்களில் ஏற்படும் இந்த நோயினால் பலநாய்கள் உணவு உண்ணாது இரத்தமாக மலங்கழித்து இறந்துள்ளன.

'டிஸ்ரெம்பர்' நோய்க்கான தடுப்பு மருந்து அதிகூடிய விலையினைக் கொண்டிருப்பதால் அதனை வாங்கி வளர்ப்பு நாய்களுக்கு ஏற்றப் பலரும் முன்வராமையே இந்த நோயினால் நாய்கள் இறக்கக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-161)

## ஆங்கிலத்தை இன்று கற்காவிட்டால்

# 10 ஆண்டுகளில் ஏனைய உலகத்தார் எம்மைத் தூக்கி எறிந்து விடுவார்கள்

## எச்சரிக்கிறார் முன்னாள் ஐ.நா. பிரதிநிதி

யாழ்ப்பாணம்,ஜூலை13

ஆங்கிலத்துக்கும் முக்கியத்துவம் கொடுத்து மாணவர்கள் கற்காவிடில் இன்னும் 10 ஆண்டுகளில் ஏனைய உலகத்தவர்களால் நீங்கள் தூக்கி எறியப்படுவீர்கள் என்ற எச்சரிக்கை விடுத்தார் இலங்கைக்கான ஐ.நா. முன்னாள் பிரதிநிதி சர்ளி மகேந்திரன்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பரிசளிப்பு விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு திருமகேந்திரன் உரை நிகழ்தினார். அதிபர் க.ஜெகநாதன் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் சர்ளி மகேந்திரன் மேலும் கூறியதாவது:-

1941 இல் மானிப்பாய் இந்து தந்த ஆங்கிலக் கல்வி என்னை ஐ.நா. பிரதிநிதியாக்கியது.

கடந்த மாதம் ஐ.நா.மாநாட்டில் நான் ஒரு மணிநேரம் பேசினேன். அந்த பேச்சாற்றலை எனக்குத் தந்தது இந்த மானிப்பாய் இந்துவே.

நீங்கள் உங்களது கல்லூரிக் காலங்களில் தமிழுக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கீர்களோ? அதேபோல் ஆங்கிலத்திற்கும் சமாந்தரமான முக்கியத்துவத்தைக் கொடுங்கள்.

இன்றே உங்கள் வீடுகளுக்குச் சென்று இச்செய்தியைச் சொல்லி ஆங்கிலத்தில் புரட்சியை ஏற்படுத்துங்கள்.

ஆங்கிலத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கத தவறுவீர்களாயின் நீங்கள் இன்னும் 10 ஆண்டுகளில் இந்த உலகில் இருந்து ஏனைய உலகத்தவர்களால் தூக்கி வீசப்படுவீர்கள்.

இன்று உலகமயமாக்கம் பற்றி பேசப்படுகிறது. அவ் உலகமயமாக்கல் செயலில் செயற்படுத்தப்படவுள்ளது.

அதற்கும் முக்கியமானது இந்த ஆங்கிலமே.

இன்று சீனா, இந்தியா, ஆசியாவை ஆங்கிலத்திற்கு பெரு முக்கியத்தும் கொடுத்து - அபிவிருத்தி அடைந்து வருகின்றன.

தேசிய சேமிப்பு வங்கியின் முன்னாள் தலைவர் சட்டத்தரணி தேவமனோகரன் சுவாமிநாதன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறியதாவது:-

மானிப்பாய் இந்து அறிவாலயத்தில் படித்தவர்கள் இன்று இலங்கையிலும், இலங்கைக்கு வெளியே பல சேவைகளை மக்கள் மனதறிந்து செயலாற்றி வருகின்றனர்.

இன்றைய இளம் சமுதாயத்தினரது பழக்க வழங்கங்கள், சிந்தனைகள் மாறிவிட்டதாக பல கல்வியாளர்களும், பெரியோர்களும் கவலையுறுகின்றனர்.

ஏன் இந்த நிலைமை வருகின்றது. உருவாகின்றது என்பதனை சிந்திக்கவேண்டும். மாணவன் ஒருவன் புத்தகத்தை மட்டுமே படித்தால் உயர்ந்தவனாகிவிட முடியாது.

நல்லொழுக்கத்தையும், கடவுள் சிந்தனையையும் முதலில் வளர்த்துக்கொள்ளவேண்டும்.

இந்துவோ, கிறிஸ்தவனோ, முஸ்லிம்மோ யாராகினும் முதலில் தெய்வவழிபாட்டுக்கு முக்கியத்துவம் கொடுங்கள். தினமும் திருக்குறளை படியுங்கள் அதுவே உங்கள் வாழ்வை வளம் படுத்தும் என்றார்.

பழைய மாணவர் சங்க முன்னாள் தலைவர் ஆங்கில ஆசிரியர் ந.விவேகானந்தராஜா மானிப்பாய் இந்துக் கல்லூரி நிறுவுநர் நாள் நினைவுப் பேருரையை வழங்கினார். திருமதி சர்ளி மகேந்திரன் பரிசுகளை வழங்கினார்.

(185-ப)

# கிராமிய வங்கி சமாசத்துக்கு கட்டடம் நிறுவ ஏற்பாடுகள்

அரியாலை,ஜூலை13

யாழ். மாவட்டக் கூட்டுறவுக் கிராமிய வங்கிகளின் சமாசத்திற்கென தனியான கட்டடம் ஒன்றை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக சமாசத் தலைவர் சி.குமரவேல் தெரிவித்தார்.

யாழ். காங்கேசன்துறை வீதியில் யாழ்.பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நடுவப் பணிமனைக்கு அருகில் சமாசத்தால் கொள்வனவு செய்யப்பட்ட காணியில் இந்தக் கட்டடம் பல லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப் படவுள்ளது.

கட்டடத்திற்கான அடிக்கல் நடும் வைபவம் அண்மையில் இடம்பெற்றது.

யாழ். மாவட்ட நிர்வாகசேவைப் பொறுப்பாளர் கி.விஜிதரன் அடிக்கல்லை நட்டார் யாழ். மாவட்ட கூட்டுறவுப் பொறுப்பாளர் பொ. புஸ்பகுமார், சமாசத் தலைவர் சி.குமரவேல் மற்றும் கூட்டுறவாளர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(ஜ-17)

## கரையோரப் பிரதேசங்களில் கட்டாக்காலி நாய்களால் தொல்லை

அரியாலை,ஜூலை13

யாழ்.நகரை அண்டிய கரையோரப் பிரதேசங்களின் கட்டாக்காலிகளாகத் திரியும் நாய்களினால் தொல்லை அதிகரித்துள்ளது.

பாஷையூர், கொழும்புத்துறை, குருநகர், ஈச்சமோட்டை, கொய்யாத்தோட்டம், சுண்டுக்குளி போன்ற இடங்களில் கட்டாக்காலியாகத்திரியும் நாய்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதுடன் அவற்றினால் வீதியால் பயணிக்கும் பாதசாரிகளுக்கு பெரும் இடைஞ்சல் ஏற்பட்டுள்ளது.

மக்கள் தமது வீட்டு நாய்களை வீதிகளில் விடுவதால் அவை வீதிகளில் கட்டாக்காலிகளாகத் திரிவதுடன் வீதி விபத்துக்களும் ஏற்பட காரணமாகின்றது என்று மக்கள் முறையிட் டுள்ளனர்.

(ஜ-17)

## கைதான இளைஞரிடமிருந்து பொலீஸாருக்கு தகவல்கள்

கொழும்பு,ஜூலை13

முல்லேரியா, அம்பத்தலைப் பகுதியில் உள்ள சோதனைச்சாவடியில் கைதாகிய தமிழ் இளைஞன் ஒருவரிடமிருந்து முக்கிய தகவல்கள் பெறப்பட்டுள்ளன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு பெரிய போரத்தீவுப் பகுதியைச் சேர்ந்த இந்த இளைஞரிடமிருந்து பல முக்கிய தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் -

இந்தச் சந்தேக நபர் இதற்கு முன்னர் வவுனியாவில் வசித்து வந்துள்ளாரென்றும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த இளைஞர் உட்பட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஏனைய இரு இளைஞர்களும் ஹட்டன்,தலவாக்கலை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர்.

கடுகதி சொகுசு தனியார் பஸ் ஒன்றில் பயணம் செய்துகெண்டிருந்த சமயமே பஸ்ஸினைச் சோதனை இட்ட போது இவர்கள் கைது செய்யப்பட்டனர். கைதான சந்தேக நபர் ஒருவரிடமிருந்து ரி-56 ரக துப்பாக்கியும் கைக்குண்டொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர்.

(ஜ-13)

## சேவை நலன் பாராட்டு வைபவம்

சுழிபுரம் தபாலகத்தில் தபாலதிபராகக் கடமையாற்றி ஓய்வுபெற்ற தம்பையா கழிலேஸ்வரனுக்கான சேவை நலன் பாராட்டு விழா கடந்த வாரம் சுழிபுரம் தபாலகத்தில் நடைபெற்றது.

சுழிபுரம் தபாலகத்தில் தபாலதிபர் என்.குகநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண பிராந்திய தபால் அதிபர் ந.ஜெயரட்ணம் ஓய்வுபெற்ற தபாலதிபர் சிபூபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

(ஜ-73)

## உற்சவ காலத்தில் வர்த்தக நிலையங்கள் திறக்கப்படும்

எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள மாவைக் கந்தன் உற்சவத்தை முன்னிட்டு வர்த்தக நிலையங்களை அமைக்கவுள்ள வர்த்தகர்கள் மற்றும் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களை நிறுவுவோர் வலி.வடக்கு பிரதேச சபை நிர்வாகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வலி.வடக்கு பிரதேசசபைச் செயலாளர் செ.செல்வரத்தினம் கேட்டுள்ளார்.

உற்சவகாலத்தில் தற்காலிக வர்த்தக நிலையங்களையும், துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையங்களையும் அமைப்பதற்கு தெல்லிப்பழை உயர்பாதுகாப்பு வலய முன்னரங்க நிலைகளுக்கு முன்பாகவுள்ள பிரதேசத்தில் இட ஒதுக்கீடுகளை மேற்கொள்ள வலி.வடக்கு பிரதேச சபை ஏற்பாடுகளைச் செய்துள்ளது. எனவே இந்தச் செயற்பாடுகள் தொடர்பாக பிரதேச சபை நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டு அனுமதிகளைப் பெறுமாறு பிரதேச சபை செயலாளர் கேட்டுள்ளார்.

(ஜ)

## விலைக்கட்டுப்பாட்டு பிரிவினர் சோதனை

தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் வடமராட்சிப் பகுதிகளில் கடந்த சனியன்று நடத்திய சோதனையின்போது காலவாதியான பொருள்களைக் கண்டுபிடித்து அழித்துள்ளனர்.

நெல்லியடி, துன்னாலை, கரவெட்டி போன்ற பகுதிகளில் உள்ள மருந்தகங்களிலும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் மக்கள் பாவனைக்குதவாத பொருள்கள் விற்பனை செய்யப்படுவதாக மக்கள் கொடுத்த தகவலையடுத்து அங்கு சென்ற விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் சோதனைகளை மேற்கொண்டனர்.

அப்போது காலாவதியான மருந்துக்குளிகைகளும், பால்மா பேணிகளையும், பிஸ்கற்றுகளையும், இனிப்பு வகைகளையும் கண்டு பிடித்து உரிமையாளர்களின் அனுமதியுடன் அழித்தனர்.

கூட்டுறவுச் சங்கமொன்றிலிருந்து பாவனைக்குதவாத கோதுமைமா, பால்மா வகைகள், பெருமளவிலான சோடாப் போத்தல்கள் என்பவற்றையும் கைப்பற்றி அழித்துள்ளனர்.

இச்சோதனை நடவடிக்கையில் சுகாதாரப் பரிசோதகர்கள், விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(ஜ-13)


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

கரவெட்டி ஸ்ரீநாரத வீதியில் வசிக்கும்

மயூரன் - சிவதர்சினி

தம்பதிகளின் செல்வப் புதல்வி

மதுசியா



13.07.2004

தனது முதலாவது பிறந்த நாளை இன்று (13.07.2004) செவ்வாய்க் கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, சவூதியில் வசிக்கும் (அம்மப்பா), அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, மாமா, அத்தை, சித்தி, சித்தப்பா, சின்னங்கிள் (டோகாவில் வசிக்கும் பெரியங்கிள்), அக்கா, அண்ணா, தம்பி, தங்கை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் செல்வி சீமா முருகமூர்த்தி பெருமானின் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்:
சி.சுபர்ணன்
(பெரியப்பா)

(34026)(37-18-19)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 27 01 1939



உதிர்வு 13 07 2001

**சதாசிவம் சிவசம்பு**

ஆண்டுகள் மூன்று போனதையா
துயரங்கள் குறையவில்லை
ஆற நினைக்கின்றோம்
அது எம்மால் முடியவில்லை.

அல்லாரை வடக்கு,
மீசாலை.

(34028)(18-19-37)

சி.கமலாவதி, (மனைவி),
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தாயக மண்ணில் 04 01 1914



தாயக மண் விட்டகன்று 13 06 2004

**அமரர் வேலுப்பிள்ளை ஆறுமுகம்**

மனிதரில் மாணிக்கமாய் மாந்தருள் திலகமாய் புனிதமாய் வாழ்ந்து மறைந்த உங்கள் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று (13.07.2004) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்கு கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம.

அராலிமத்தி,
குமுக்கன் லேன்,
வட்டுக்கோட்டை,

(33850)(39-18-19-37)

-அன்பு மனைவி,
மக்கள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 31ஆம் நாள் நினைவு அலைகள்



**குமரையா துரைராஜா**
(ஓய்வுபெற்ற பிரதிப் பொது முகாமையாளர்),
இலங்கை வங்கி,

எங்கள் ஆசானும் உலகளாவிய ரீதியில் பல்துறை பட்டதாரியுமான சண்டிலிப்பாயை உதிப்பிடமாகக் கொண்ட மானிப்பாய் மருதடி பிள்ளையாரின் பரமபக்தருமான காலஞ்சென்ற குமரையா துரைராஜா அவர்களின 31ஆம் நாளாகிய இன்று அவரது ஆத்மா சாந்தி அடையவும், அவர்தம் குடும்பத்தினர் ஆறுதல் அடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சண்முகம் குகபாஸ்கரன்
குடும்பத்தினர்.
"குகஸ்தான்"
உடுவில், சுன்னாகம்.

(33977)(39-18-19-37)

# மிளகாய்ச் செடிகளில் இலைச்சுருள் நோய்...

நமது நாட்டில் குறிப்பாக யாழ்.மாவட்டத்திலும், வன்னிப் பிரதேசத்திலும் மிளகாய் பயிர்ச் செய்கை முக்கிய இடத்தை வகிக்கின்றது. 1990களில் 30ஆயிரம் ஹெக்டெயரில் பயிரிடப்பட்ட மிளகாய் பயிர் 2000ஆம் ஆண்டு அளவில் 19ஆயிரம் ஹெக்டயரில் பயிரிடப்பட்டுள்ளது. இப் பயிர்ச்செய்கை விஸ்தீரண வீழ்ச்சிக்குப் பல காரணிகள் இருப்பினும் இலைச்சுருள் நோயே பிரதான காரணியாகும். இது வரட்சியான காலநிலையில் அதிகம் காணப்படு




கின்றது. யாழ். மாவட்டத்தில் 500ஹெக்டயர் நிலப்பரப்பில் செய்கை பண்ணப்படும் மிளகாயானது பச்சை மிளகாய்க்கும் செத்தல் மிளகாய்க்கும் பயன்படுகின்றது.

அதிகளவு தாக்கத்தை ஏற்படுத்தும் இலைச்சுருள் நோய் எரிகுருமன் என விவசாயிகளினால் அழைக்கப்படுகின்றது. கட்டுப்படுத்த முடியாமல் தவிக்கும் விவசாயிகளுக்காக இந்த இலைச்சுருள் நோய் பற்றிய தெளிவான விளக்கத்திற்காக சில தரவுகள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

### மிளகாய் இலைச்சுருள்

இத்தாக்கம் மிளகாயின் நாற்றுப்பருவம் தொடங்கி அறுவடைகாலம் வரை தாக்குகின்றது. மிளகாய்ச் செடிகளின் இலைகள் தமது சாதாரண வடிவத்தை இழந்து மேல் நோக்கி வளைந்தும் சுருண்டும் சுருக்கங்கள் விழுந்தும் மாற்றம் அடைகின்றன. சிலவேளைகளில் இலைகளின் பருமன் சிறுத்தும் ஒடுங்கியும் செடியின் நுனிக் குருத்துக்கள் கருகியும் காணப்படும். இலை நரம்புப் பகுதி மஞ்சள் நிறமாகி பழுப்பு நிறத்தை அடைந்து இலைகள் உதிர்வடைகின்றன. இப் பீடைகளின் தாக்கத்தினால் வளர்ச்சி தடைப்பட்டு பூத்தல், காய்த்தல் மிகவும் குறைந்து விளைச்சலில் பாரிய இழப்பு ஏற்படும். இந்த இலைச்சுருள் நோய்க்கான காரணிகள் வருமாறு:-

பனிப்பூச்சி- (Thrips),
சிற்றுண்ணி- (Mites),




அழுக்கணவன்- (Aphids),
வெண் ஈ- (Whitefly)

இவையாவும் ஒருமித்துத் தாக்குவதனாலேயே இலைச் சுருள் சிக்கல் ஏற்படுகின்றது. இருப்பினும் தனித்தனியான தாக்கத்தையும் இப் பீடைகள் ஏற்படுத்துவதுண்டு.

### பனிப்பூச்சி

மிளகாய் இலைச்சுருள் நோயை ஏற்படுத்தும் பிரதான பீடை பனிப்பூச்சியாகும். எந்தவிதமான பூச்சிநாசினிகளும் பாவியாத நிலையில் இப்பனிப்பூச்சியானது 57வீதம் அல்லது அதனை விடக் கூடுதலான அளவில் விளைச்சலில் வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது.

பனிப்பூச்சியானது மிகவும் சிறிய 1-1.5mm நீளமான வெண் மஞ்சள் நிறப் பூச்சியாகும். சாதாரண கண்ணிற்கு தென்படும் இப்பூச்சியானது 10-100வரையான முட்டைகளை இலைப் பரப்பில் இடுகின்றது. இதற்கு நான்கு அணங்குப் பருவங்கள் உண்டு. முதல் பருவம் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் இலைகள் மேல்நோக்கிச் சுருளும். இரண்டாவது அணங்கப் பருவம் சாற்றை உறிஞ்சிக் குடிப்பதால் இலையின் நடு நரம்பு மஞ்சள் கபில நிறமாகி இலைகள் உதிர்கின்றன.

(Bronzing and defoliation) பிந்திய இரண்டு அணங்குப்பருவங்கள் தாக்கத்தை ஏற்படுத்துவதில்லை என அறியப்பட்டுள்ளது.

முதிர்ச்சி அடைந்த இலையும் காய்களும் கூட தாக்கப்படுகின்றன. காய்களின் பருமன் சிறிதாவதுடன் ஊதா நிறப் பரப்புகள் தோன்றி அவற்றில் படிப்படியாக வெடிப்புகளும் தோன்றுகின்றன. தாக்கத்தின் பின் உருவாகும் இலைகள் வெளிர் நிறத்துடன் வெளிவருவதுடன் பூக்களும் உதிர்ந்துவிடும்.

பனிப்பூச்சியின் பெருக்கமானது வெப்பநிலை சாரீரப்பதன் மற்றும் காற்றின் வேகம் ஆகியவற்றில் தங்கியுள்ளது. வெப்பநிலை கூடும்போது பனிப்பூச்சியானது மிகவும் வேகமாக இனப்பெருக்கமடைந்து ஏனைய இடங்களிற்கும் பரம்பல் அடையும்.

**செல்வி பா.பாலசிங்கம்,**
**சி.ஜே.அரசகேசரி, க.ஜெகநாதன்**
**விவசாய ஆராய்ச்சி நிலையம்,**
**திருநெல்வேலி.**

### சிற்றுண்ணி

இளம் மஞ்சள் நிறமான சிற்றுண்ணிகள் இலைகளின் கீழ்ப்புறத்தில் இருந்து சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் கீழ்ப்பக்கமாக கவிழ்ந்து சுருளும். அத்துடன் இலைகள் தடித்தும் ஒடுங்கிச் சிறுத்தும் காணப்படும். விவசாயிகள் கவனிக்க வேண்டியது என்னவென்னில் பனிப்பூச்சியின் தாக்கமும் சிற்றுண்ணியின் தாக்கமும் இரு வேறு வகையானவை என்பதை-

### அழுக்கணவன்

இலையின் அடிப்பகுதியிலும் தண்டின் இளம் பகுதிகளிலும் அதிகம் செறிந்து காணப்படும். இலையைத் தாக்குவதால் இலைகள் குறுக்கப்பட்டு உரு மாறி வளைந்து காணப்படும்.

### வெண் ஈ

இலைகளில் இருந்து சாற்றை உறிஞ்சிக் குடிப்பதுடன் வைரசை ஒரு செடியில் இருந்து இன்னொரு செடிக்குக் கடத்தும் காவியாகத் தொழிற்படுகின்றது. இருபதிற்கு மேற்பட்ட வைரசுக்கள் மிளகாயைத் தாக்குவதாயினும் இலங்கையில் குறிப்பாக வரண்ட பிரதேசங்களில் இலைச்சுருள் வைரஸ் (Leac curlvirus) அதிக தாக்கத்தை ஏற்படுத்தும்.

### கட்டுப்படுத்தும் வழிமுறைகள்

மேற்கூறிய காரணிகள் தனித்தனியே தாக்கத்தை ஏற்படுத்துவதனால் இவற்றைக் கட்டுப்படுத்த இரசாயனங்கள் பயன்பட்டு வந்தன. இருப்பினும் சரியான, தெளிவான, பீடை அறிகுறிகள் தெரியாத விவசாயிகள் பொருத்தமற்ற இரசாயனங்கள் விசுறுவதால் இப்பீடைகளைத் தனித்தனியாகவோ இலைச்சுருள் நோயையோ கட்டுப்படுத்த முடியாதுள்ளது. அத்துடன், இதற்கென சிறப்பான எதிர்ப்புத் தன்மையுள்ள மிளகாய் இனங்கள் இதுவரையில் வெளிவரவில்லை. தனியொரு முறையில் கட்டுப்படுத்த முடியாதுள்ளது. அத்துடன், இதற்கென சிறப்பான எதிர்ப்புத்தன்மையுள்ள மிளகாய் இனங்கள் இதுவரையில் வெளிவர

**கமமும் புலமும்**
**தயாரிப்பு: ஜெயஸ்ரீ**

வில்லை. தனியொரு முறையில் கட்டுப்படுத்த முடியாதுள்ள இந்தநோயை ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாட்டு முறையினால் குறிப்பிட்டளவு கட்டுப்படுத்தமுடிகின்றது.

★ தரமான விதைகளை நம்பத்தகுந்த முகவர்களிடம் இருந்து பெற்று நாற்றுககளை உருவாக்க வேண்டும்.

★ $KA_2$ என்னும் மிளகாய் இனம் பனிப்பூச்சிக்கு ஓரளவு எதிர்ப்புத் தன்மையைக் காட்டுவதால் பச்சை மிளகாய் உற்பத்தி செய்யும் விவசாயிகள் இவ் இனத்தைப் பயன்படுத்துவது விரும்பத்தக்கது.

★ வைரசுகள் பிந்திய காலத்திலேயே மிளகாய்ச் செடியை அதிகம் தாக்குவதால் வைரசு




அற்ற தாவரங்களைத் தெரிவுசெய்து 2ஆம்; 3ஆம் அறுவடையின்போது பெறப்படும் காய்களைப் பயன்படுத்தித் தரமான விதைகளைப் பெறமுடியும்.

★ சிறுபோகத்தில் மிளகாயைப் பயிர்செய்யும்போது நேரகாலத்துடன் நடவேண்டும். ஏப்ரல் மாத நடுப்பகுதிக்கு முன் நடுகை செய்வது சிறந்தது. ஜூன், ஜூலை மாதங்களில் அதிகளவு வெப்பநிலையோடு பெருகும் பனிப்பூச்சியின் தாக்கத்தில் இருந்து இம் முந்திய கால மிளகாய்ச் செய்கையைப் பாதுகாக்கலாம்.

★ முன்னைய காலத்தில் நடப்பட்டுக் கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் மிளகாய்ச் செடிகளை அகற்றிவிட்டுத் தோட்டத்தைச் சுத்தமாகப் பேணவேண்டும்.

★ பாதுகாப்புப் பயிர்களை தோட்டத்தைச் சுற்றி எல்லைப் பயிராக நடுதல் சிறந்ததாக அறியப்பட்டுள்ளது. சோளம் மற்றும் குரக்கன் போன்ற பயிர்களை நடுவதால் பயிர்களுக்கு இடையேயான முன் சூழலில் இப்பீடைத் தாக்கத்திற்கு எதிரான சாதகமான சூழ்நிலை ஒன்று உருவாகும். அத்துடன், மேலதிக வருவாயும் கிடைக்கும்.

சரியான அளவிலான உரப்பாவனை முக்கியமானதாகும். அதிகளவில் நைதரசன் உரங்களைப் பாவிக்கும்போது தாவரம் செழித்து இலைகள் மென்மையாகுவதால் பூச்சிகளின் தாக்கத்திற்கு எளிதில் இலக்காகின்றது. வேப்பம் புண்ணாக்குடன் யூரியாவைக் கலந்து தாவரத்திற்கு இடுதல் சிறந்தது.

### பூச்சி நாசினிகளின் பயன்பாடு

இரசாயனப் பூச்சி நாசினிகளின் பாவனை சரியான கட்டுப்பாட்டை அளிக்காத பட்சத்தில் தாவரவியல் பூச்சி நாசினிகளைப் பயன்படுத்துவது பற்றித் திருநெல்வேலி, விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் செய்யப்பட்ட ஆய்வுகள் நல்ல முடிவைத் தந்துள்ளன.

இரசாயனக் கிருமி நாசினிகள் பற்றிய போதிய அறிவும் அதன் தாக்கங்கள் மற்றும் எதிர்விளைவுகள் என்பனவும் விவசாயிகள் மட்டத்தில் சரியாக அறியப்படவில்லை. இதனால், ஏற்கனவே அறிந்துள்ள பரீட்சயமான தாவரப் பொருள்களின் பயன்பாடு நம்பத்தகுந்ததாக உள்ளது. எளிதில் தயாரிக்கப்பட்டு விசிறப்படக்கூடியதுடன் இதன் தயாரிப்பில் அதிக தொழில்நுட்பங்கள் இல்லை. மலிவானதுடன் சூழலின் பாதிப்பு அதிகம் இல்லாததால் உற்பத்தியாக்கப்பட்ட உணவுப் பொருள்களைப் பயமின்றி உட்கொள்ளலாம்.

கடுவநாவல், அன்னமுன்னா, பாவட்டை, வேம்பு, உள்ளி, மிளகாய் மற்றும் புகையிலை போன்ற தாவரப் பொருள்கள் பல்வேறு நாடுகளில் பலதரப்பட்ட பீடைகளுக்கு எதிர்ப்பு உடையவனாக அறியப்பட்டுள்ளன. மாட்டுச்சலம, பச்சைச்சாணம் போன்ற கரைசல்களும் பீடை எதிர்ப்புத் தன்மை கொண்டுள்ளதாக அறியப்பட்டுள்ளன.

யாழ். பிரதேசத்தில் உள்ளிக் கரைசல், வேப்பம் விதைச்சாறு, மாட்டுச்சலம் என்பவற்றின் செயற்றிறன் ஆராயப்பட்டவிடத்து உள்ளிச்சாறும் வேப்பம்விதைச்சாறும் பனிப் பூச்சித்தாக்கத்திற்கு அதிக வினைத்திறன் உடையதாக அறியப்பட்டுள்ளன.

### உள்ளிச்சாறு

சுத்தமாக்கப்பட்ட, உடைத்த 10கிராம் உள்ளியை நன்றாக அரைத்து எடுத்து அதற்குள் ஒரு மில்லிமீற்றர் கிராம் மரக்கறி எண்ணெய்யை ஊற்றிச் சிறதளவு நீருடன் கலந்து 10மணிநேரம் ஊறவைத்த பின்னர் சவர்க்காரத்தூள் கலக்கவும். அடுத்தநாள் காலையில் இக்கரைசலை நுண்துளை வடியினால் வடித்து ஒரு லீற்றர் கரைசலாக்கி நேரடியாக விசிறலாம். தயாரித்த கரைசல் உடனடியாகப் பாவிக்கப்பட வேண்டும்.

### வேப்பம் விதைச்சாறு

கோது நீக்கிய வேப்பம் பருப்புக்களை நன்றாக அரைத்து ஒரு கிராம், ஒருலீற்றர் கரைசலுக்கு என்னும் அளவிற்குக் கலந்த சவர்க்காரத்தூள் கரைத்துச் சிறிதளவு நீர் விட்டு ஒரு இரவு ஊறவிடவேண்டும். அடுத்த நாள் காலையில் நுண்துளை வடியொன்றினால் வடித்து ஒரு லீற்றர் கரைசல் ஆக்கி விசிறலாம். இலைச் சுருள் நோயின் தன்மையைப் பொறுத்துக் கிழமைக்கு ஒருமுறை விசுறுவதானால் நல்ல பலன்கிடைக்கப்பெறும்.

எது எவ்வாறு இருப்பினும் மிளகாயின் இலைச்சுருள் நோய் கட்டுப்பாடு விவசாயிகளின் மட்டத்தில் சிரமமாகவே உள்ளது. ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டு முறையின் ஒரு அங்கமான எதிர்ப்பினங்களின் அறிமுகம் முயற்சிக்கப்பட்டு வருகின்றது. மேற்கூறிய முறைகளுடன் பொருத்தமான எதிர்ப்பு மிளகாய் இனம் ஒன்று வெளிவந்தால் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்படக்கூடும். ஆனாலும், ஒருங்கிணைந்த பீடைக் கட்டுப்பாட்டை விவசாயிகள் கருத்தாய் கடைப்பிடித்தால் வருவாயுடன் கூடிய மிளகாய்ச் செய்கையை மேற்கொள்ளலாம்.

# உளவளம் நிறைந்த சமூகத்தை உருவாக்குவது ஆசிரியர் பொறுப்பு

ஆசிரியர் கல்வி நவீன சிந்தனைகளின் செயல்வடிவமாக மாற்றமடைய வேண்டியது காலத்தின் தேவையாகும். ஓர் ஆசிரியர் தனது உளவளத்தை முழுமையாகப் பேணி, தனது மாணவரது உளவளத்தை உயர்த்தும் நெறியாளராக வளரவேண்டும். குறிப்பாக, ஆசிரியர் என்ற சொல்லிலே மாற்றப்பட்டு (Counseller) ஆலோசகர் அல்லது சீரமியர் என ஆக்கப்பட வேண்டிய நிலையில் ஆசிரியர் பணியின் தேவை வளர்ந்துள்ளது. நமது நாட்டின் உள் நாட்டுப் போரின் தாக்கம் மனித மனங்களைச் சிதைத்துவிட்டது. போரில் சிக்கிச் சீரழிந்து யாழ். குடாநாடு உளநெருக்கீட்டுக்கும், மன அழுத்தங்களுக்கும் ஆளான சராசரி மனிதர்களால் நிறைந்துள்ளது. குறிப்பாக, பள்ளிச்




சிறார்களும், இளவயதினரும் பல்வகை உள அழுத்தங்களால் பாதிக்கப்பட்டு இயல்பு நிலையில் இருந்து விலகியுள்ளனர். இத்தகைய பாதிப்புக்கள் கல்வி நிறுவனங்களின் செயற்பாட்டில் நினைத்துப் பார்க்கமுடியாத பின்னடைவை ஏற்படுத்தியுள்ளன.

### இருள் சூழ்ந்த எதிர்காலம்

வீட்டின் சூழல், இருள்சூழ்ந்த எதிர்காலம், வெறுப்பு மயமான பார்வை, மன அழுத்தங்களால் தாக்கம் என நெருக்கடிகளை மாணவர்கள் எதிர்நோக்கி உள்ளனர். பாடாலைகள் செயல் இழந்து கிடக்கின்றன. பாடசாலைகளின் உயிர்த்துடிப்பைக் காணவிளையும் கல்விச் சீர்திருத்தங்கள், புதிய முன்னெடுப்புக்கள் மாணவர்களைச் சென்றடையாதவாறு தடைக்கற்கள் குறுக்கே பரவவிடப்பட்டுள்ளன. பெரும்பாலான ஆசிரியர்கள் செயற்படமுடியாத துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர். பெற்றோரது போதிய ஒத்துழைப்பின்மை, மாணவர்களது புறக்கணிப்பு, வழிநடத்த முடியாத ஆசிரியர்களின் கையாலாகாத் தனம் இவை இன்றைய இயல்பு நிலைகள் ஆகிவிட்டன. எதிரான ஆசிரியர்கள் தமது பணியில் தொடர்ச்சியான மன அழுத்தங்களுக்காளாகியுள்ளனர். இந்நிலையில், மாணவர்களை உள நெருக்கடுகளிலிருந்து விடுவித்து, இயல்பான கற்றல் சூழலுக்கு உட்படுத்தும் நிலையில் ஆசிரியர்கள் எவ்வாறு வெற்றி காணமுடியும்? கற்பித்தற் கருமத்துடன் ஒன்றிணையும் சூழ்நிலை தூர விலகிச்செல்கிறது. கருத்தரங்குகள், சேவைக்காலப் பயிற்சிகள், கணிப்பீட்டு வேலைகள், தொடர்ந்து வழங்கப்படும் பல்வேறு வேலைப் பழுக்கள் ஆசிரியர்களை மண அழுத்தங்களுக்கு இட்டுச்செல்கின்றன. ஆசிரியர்களே இயல்பு நிலையிலிருந்து தூரவிலகி நிற்கும்போது, மாணவர்களைச் சூழலின் தாக்கங்களிலிருந்து விடுவித்துக் கற்றல் கருமங்களில் முழுமையாக ஈடுபடுத்துவது எவ்வாறு சாத்தியமாகும்?

### ஆலோசனை வழங்கல்

இன்றைய மாணவர்கள் அசிரத்தை, மனச்சோர்வு, போருணர்வு, பதகளிப்பு, சமூகவிரோத மனப்பாங்கு, போதை நாட்டம் போன்ற இழிநிலைகளுக்காளாகியுள்ளனர். வன்முறை எண்ணங்களை எளிதாகப் பெற்றுக்கொள்கின்றனர். சூழ்நிலைதான் அவர்களைக் கெடுத்து விடுகிறது. முதலில் சூழ்நிலையிலிருந்து தன்னை விடுவித்துக்கொள்ளும் திறன் ஆசிரியரிடத்தே ஏற்படுத்தப்படவேண்டும். அத்தகைய திறன் விருத்திபெற்ற ஒருவரே தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவனைச் சூழலின் பிடியிலிருந்து விடுவித்து வழிகாட்டமுடியும்.

அழிவுகளால் தொடரும் துன்பம் நிறைந்த எமது சமூகத்தை அழியாது சுடர்விடும் ஒரு நம்பிக்கையை ஒவ்வொரு மாணவனதும் உள்ளத்தில் தூண்டிவிடும் தகைமையை ஆசிரியர் பெறவேண்டும். ஓர் ஆசிரியர் தனது வாழ்வை அர்த்தமுள்ளதாக ஆக்கிக்கொள்ளவேண்டும். எந்தக் கொடூரத்தின் மத்தியிலும் தலைநிமிரும் மனவலுவை ஆசிரியர் பெறவேண்டும்.

### வதிவிடக்கற்கை நோக்கு

ஆசிரியப்பணி எளிதாகக் கிட்டும் வேலை வாய்ப்பு என்ற எண்ணத்துடன் இப்பணிக்கு வருவோர் தொகை அதிகரித்து வருகிறது. ஆகவே, அவர்களையும் வரவேற்று எத்தகைய இடர்பாடாகச் சமூகத்திலிருந்து தான் வருகிறேன என்பதை நன்குணர்ந்து, அச்சமூகத்திற்குத் தான ஆசிரியன் என்றவகையில் ஆற்றவேண்டிய பொறுப்புணவர்வான பங்களிப்பை உணர்ந்து

> இரக்கமற்ற சமூகம் ஒன்று உருவாகி வருகிறது. இதனைத் தடுக்கவல்ல ஆசிரியர் வளத்தை வழங்குவது ஆசிரியப் பயிற்சி நிறுவனங்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

கொள்ளும்வகையில் ஆசிரியர் கல்வி வளமாக கப்படவேண்டும். அவர்கள் உளவியல், சமூகவியல், ஆலோசனை வழங்கள், தத்துவ ஆய்வு என்ற துறைகளினூடாகத் தனது சமூகக் கடமையை விழிப்புணர்வுடன் நோக்கத்தகக் நிலையை எய்யவேண்டும்.

ஆதி இந்துக் கல்வி மரபில் பன்னிரண்டு ஆண்டுகள் தனது குடும்பத்தை முற்றாகத் துறந்து பெற்ற கல்வியே பிரம்ம ஞானம் எனப்பட்டது. பிரம்மஞானம் என்பது தன்னையும் சமூகத்தையும் கடமையையும் தனக்கும் சமூகத்திற்குமிடையிலான தொடர்பையும் அறிந்து கொள்ளும் முழுமையான தகுதியாகும். முழுமையான ஆளுமைவிருத்தி சமநிலை ஆளுமை (Balance Personaliry) திறனாகும்.

இத்தகைய பண்டைய கல்வியின் பாங்கினை ஓரளவிலேனும் பெறத் தகுதியுடையது வதிவிடக் கற்கையொன்றேயாகும். இதன்மூலம் தற்காலிகமாக மாசுபட்ட சமூகத்திலிருந்து விலகித் தனிமையான ஒரு புதிய சூழலுக்குட்படுத்தமுடியும். வதிவிடக் கற்கையை முகாமை செய்வோரும் வழிநடத்துவோரும் அத்தகைய புதிய உளவியல்சார், சமூகஞ்சார் சூழலை உருவாக்கும்திறன் கொண்டிருக்க வேண்டும். இங்குதான் ஆசிரிய மாணவன் கற்கும் காலத்தில் பெரும் பொழுதைப பயனுறுதி வாய்ந்து செயல்களில் ஈடுபடவாய்ப்புக்களைத் திட்டமிட்டு வழங்கவேண்டும்.

ஏற்கனவே, சமூகத்தில் பெற்ற மனவடு, சமூகக் கீறல்கள், தவறான உணர்வு, நெறிகேடான சமூக எண்ணங்கள் இவற்றுக்கான பரிகார அனுபவங்களை வதிவிடக் கல்வியில் தான் ஏற்படுத்திக் கொள்ளமுடியும். சுயசிந்தனை, தனித்துவம், சமூகக்கட்டமைப்பு, சமூகப்புரிந்துணர்வு, சமூக அர்ப்பணம், ஒன்றுபட்டுக் கரும மாற்றுதல் போன்ற பல்வேறு சமூக அனுபவங்களைத் திரட்டி, உளவளத்தினை உறுதி

கு.சண்முகநாதன்
உப அதிபர்,
வசாவிளான் மத்திய கல்லூரி.

செய்யமுடியும். முழுமையான உளவியல் அனுபவங்களை வழங்கும் வாய்ப்புக்களை மையமாகக் கொண்டதாகவே வதிவிடக் கற்கை ஒழுங்கமைக்கப்படவேண்டும்.

### இரக்கமற்ற சமூகம்

சிறிதுசிறிதாக இரக்கமற்ற வைரித்த சமூகமொன்று விரைவாக இங்கு உருவாகிவரும் சூழ்நிலையை அவதானிக்கமுடிகிறது. இந்நிலையை எதிர்கொண்டு மனிதாபிமான உணர்வுகளின் அடிப்படையில் மாணவர்களை உருவாக்கும் சூழலை ஆசிரிய மாணவர் மனதில் வேரூன்றச் செய்யவேண்டும். ஆகவே, ஆசிரியர் கல்வி என்பது பாடசாலைக்கு உளவளம் நிறைந்த ஆசிரிய மனித வளத்தை வழங்குவதையே குறியாகக் கொண்டதாக இருத்தல் வேண்டும். வரண்ட தரையில் நீர்சுரக்கச் செய்யும் முயற்சி போன்று, மனிதமனங்களில் மனித விழுமியங்களை, மனித நேயத்தை உருவாக்கும் திறனை வளர்ப்பதாக இருக்கவேண்டும்.

ஆசிரியர் சராசரி மனிதர் என்ற நிலையிலிருந்து விடுபட வேண்டும். நமது நாட்டில் இத்தகைய நிலை 50 ஆண்டுகளுக்கு முன்னர் நடைமுறையிலிருந்தது. இன்றைய சிக்கலடைந்த சமூகத்தை, அச்சிக்கலிலிருந்து மீட்பதற்கு வேண்டிய மீட்பர்களே ஆசிரியராக வேண்டும். உளவளம் நிறைந்த ஒரு பாடசாலையால் நல்லதொரு புதிய சமூகத்தை உருவாக்க முடியும். இன்று ஒரு நல்ல பாடசாலை இல்லையேல் மூன்று மன நோயாளர் விடுதியைத் திறக்கவேண்டிய நிலை ஏற்படும் என்று எச்சரிக்க வேண்டியுள்ளது. ஆகவே, இருக்கின்ற பாடசாலைகள், ஆசிரிய கல்வி நிறுவனங்கள் மனநோயாளிகளை உருவாக்கும் செயல்களின்றும் தூர விலகுவதுடன், உளவளம் நிறைந்த சமூகமொன்றினை உருவாக்கப் பங்களிப்புச் செய்வது பற்றிச் சிந்திக்கவேண்டும்; செயற்படவேண்டும். ✳

# 'ரெலிக்கொம்' செயற்பாடுகள் ஓகஸ்ட் முதல் மறுசீரமைப்பு

கொழும்பு,ஜூலை13

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் செயற்பாடுகள் மறுசீரமைக்கப்படவுள்ளன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதன்கீழ், வடக்கு - கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு பிரதேசங்களில் மட்டுமே மேற்படி நிறுவனத்தின் காரியாலயங்கள் செயற்படும் எனவும், மற்றைய இடங்களில் தற்போது இயங்கிவரும் பிரதேச பரிவர்த்தனை நிலையங்கள் மூடப்படுவதுடன் அங்கு சேவையாற்றும் ஊழியர்கள் அவ்வப்பிராந்தியக் காரியாலங்களுடன் இணைக்கப்படவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இந்த நடைமுறை பெரும் அசௌகரியத்தையும் காலதாமதத்தையும் ஏற்படுத்தும் என ரெலிக்கொம் வாடிக்கையாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

(ஒ-201)

# கல்விச்சாலைக் காட்சிகள்



மாதகல் சென்.தோமஸ் றோ.க. பெண்கள் பாடசாலையில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் கலந்துகொண்ட் பெற்றோர்களையும் மாணவர்களையும் படத்தில் காணலாம். (படம்: மாதகல் செய்தியாளர்)



பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்களின் ஒன்றுகூடல் நிக்ழ்வு அண்மையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி தி.கமலநாதன் மங்கள விளக்கேற்றுவதையும் அருகில் சிரேஷ்ட விரிவுரையாளர் கு.சண்முகநாதன், மாணவர் மன்றத் தலைவர் நாக. விக்கினேஸ்வரன் ஆகியோரையும் படத்தில் காணலாம்.

(படம்: தெல்லிப்பழைச் செய்தியாளர்)



தெல்லிப்பழைப் பிரதேச முன்பள்ளிக் கண்காட்சி அண்மையில் நடைபெற்றபோது வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளி மேம்பாட்டு நிலையத்திட்ட உதவியாளர் த.சுசிகரன் மங்கள விளக்கேற்றுவதைப் படத்தில் காணலாம். பிரதேச முன்பள்ளித் தலைவர் செ.நம்பியாரூரன், முன்பள்ளி ஆசிரியர் சங்க உபதலைவர் ஆ.தேவகுமார் மற்றும் ஆசிரியைகளும் படத்தில் உள்ளனர். (10)



வரணி, கரம்பைக்குறிச்சியில் யு.எஸ்.எய்ட் திட்டத்தின் கீழ் சர்வோதயம் அமைப்பு நடத்திவரும் கல்வி நிலையத்தின் விளையாட்டு விழாவில் கலந்துகொண்ட அமைப்பின் திட்ட இணைப்பாளர் திருமதி எஸ். அருட்செல்வி கொடியேற்றி வைப்பதைப் படத்தில் காணலாம். கிராம அலுவலர் திருமதி இ.மனோகரனும் படத்தில் உள்ளார்.

(படம்: வரணிச் செய்தியாளர்)

# இடைக்கால சம்பள உயர்வு வேண்டும்; அரச ஊழியர் சங்கக் குழு கோரிக்கை

கொழும்பு,ஜுலை13

திஸ்ஸ தேவேந்திரா ஆணைக்குழுவின் சம்பள உயர்வு சிபாரிசுகள் நடைமுறைப்படுத்தப்படும் வரையிலான இடைக்காலச் சம்பள உயர்வு ஒன்றை வழங்கும்படி பொதுச்சேவைகள் தொழிற் சங்கங்களின் குழு கோரிக்கை விடுத்துள்ளது.

பொதுத்துறையிலுள்ள சகல ஊழியர்களுக்கும் மூவாயிரம் ரூபாய் இடைக்காலச் சம்பள உயர்வு வழங்கவேண்டுமென அக்குழு நிதி அமைச்சரைக் கேட்டுள்ளது.

நிதியமைச்சர் டாக்டர் சரத் அமுனுகமவுக்கு மேற்படி குழு எழுதியுள்ள கடிதத்தில் அரச துறையிலுள்ள ஏனைய துறைகள் பற்றி ஏது வித அக்கறையும் காட்டப்படாமல் சுகாதார ஊழியர்களின் சம்பளங்கள் மாத்திரம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டியுள்ளது.

சுகாதார சேவை ஊழியர்களின் சம்பள முரண்பாடுகள் நீக்கப்பட்டு 1991 ஜனவரி முதலாம் திகதியில் இருந்து அவர்களுக்குச் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் ஏனைய ஊழியர்களின் சம்பளங்களுக்கும் சுகாதார ஊழியர்களின் சம்பளங்களுக்குமிடையில் மூவாயிரம் ரூபாய் இடைவெளி காணப்படுகின்றது.

இது பொதுச் சேவையாளர்களின் மனங்களில் பெரும் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே, இவர்களுக்கு இடைக்கால சம்பள உயர்வொன்றை அரசு வழங்கவேண்டியது அவசியமாகும் என்று தொழிற்சங்கக்குழுவின் அழைப்பாளர் டபிள்யூ.எச்.பியதாஸ தெரிவித்துள்ளார். (ப)

## சிறந்த விவசாயிகள் தெரிவு

வரணி,ஜுலை13

சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தின் கீழ் இயங்கும் விவசாய சம்மேளனங்கள் ஊடாகச் சிறந்த விவசாயிகளைத் தெரிவுசெய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

2003 காலபோக விவசாயச் செய்கையை யொட்டியே இத்தெரிவு நடைபெறும் எனவும் - இவை நெற்பயிர், நீர்முகாமைத்துவம், பெண் தலைமைத்துவம், வதிவிட வேளாண்மை, மிளகாய்ச் செய்கை ஆகியவற்றுக்குத் தனித்தனியாகத் தெரிவுகள் நடைபெறவுள்ளன எனவும் - விவசாய அபிவிருத்தி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஒ-70)

## ஆங்கில தினப் போட்டிகள்

வலி.தெற்கு,ஜுலை13

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கான கோட்டமட்ட ஆங்கில தினப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி உடுவில் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன என்று கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்துள்ளார். (ஒ-152)

# குடாநாட்டுப் பெண்களின் பிரச்சினைகள் குறித்து ஆய்வு

யாழ்ப்பாணம்,ஜுலை13

குடாநாட்டுப் பெண்களின் பிரச்சினைகள் குறித்து ஆராயும் சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற்துறை மகளிர் பிரிவு ஏற்பாடு செய்த இச்சந்திப்பினை யாழ். பெண்கள் மேம்பாட்டு மையம் நடத்தியது.

இச்சந்திப்பில் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் அமைந்துள்ள மாதர் சங்கங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டு பிரச்சினைகளைத் தெரிவித்தனர்.

மாதர் சங்கங்களிற்கான அபிவிருத்தி, பெண்களுக்கான சுயவேலைவாய்ப்பு, தொழிற் பயிற்சிகள் மற்றும் கிராமத்தில் மாதர் சங்கங்களுக்கு ஏற்பட்டுவரும் பிரச்சினைகள் ஆகியவை குறித்து அங்கு ஆராயப்பட்டது.

இச்சந்திப்பில் யாழ். மாவட்ட மகளிர் அரசியற்றுறைப் பொறுப்பாளர் கயல்விழி, யாழ். மாவட்ட பெண்கள் மேம்பாட்டு மையத்திற்கு பொறுப்பான எஸ்.முகுந்தா மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஒ-6)



யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் இடம்பெற்ற பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடலில் யாழ். மாவட்ட அரசில்துறை மகளிர் பொறுப்பாளர் கயல்விழி, நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன், பெண்கள் மேம்பாட்டு மையப் பொறுப்பாளர் முகுந்தா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகப் படப்பிடிப்பாளர்)

# யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கணனி நூல்கள், இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்,ஜுலை13

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரியின் "மத்தியத்தின் வெளியீடுகள்" வரிசையில் நான்கு கணனிசார் நூல்களும் அவற்றின் தொகுப்பாகிய இறுவட்டு ஒன்றும் நாளை வெளியிடப்படவுள்ளன.

நாளை காலை 10 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி தம்பர் மண்டபத்தில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

கணனி போதனாசிரியர் க.கமலசேகரத்தின் ஆக்கத்தில் உருவான ஜி.சீ.ஈ உயர்தர மாணவர்களின் பொதுத் தகவல் தொழில் நுட்பப் பாடத்திட்டத்துக்கு ஏற்றதாகக் கணனியின் வரலாறு மற்றும் கணனி பயில்பவர்களுக்கான கணனி தட்டச்சுநெறி பயில்பவர்களுக்கு மிக அத்தியாவசியமான வழிகாட்டியும், பயிற்சி நூலுமான கணனி விசைப்பலகை, கணனி தட்டச்சு - தமிழ் கணனி தட்டச்சு ஆங்கிலம் என்ற நான்கு நூல்களும் - இவற்றை உள்ளடக்கிய இறுவட்டும் வெளியிடப்படவுள்ளன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ.விசாகலிங்கம் கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில் யாழ்ப்பாண கல்வி வலயத்தினால் கல்லூரியின் முறைசாராப் பிரிவின் ஊடாகக் கணனிக் கல்வி நெறி பயின்ற மாணவர்களுக்கும் ஏற்கனவே மினி இன்போரெல் (Mini Infortel) நிறுவனத்தின் கண்காட்சியில் பங்குகொண்ட மாணவர்களுக்கும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (ஒ)

# பாலர்விடுதி திறப்புவிழா

கோப்பாய்,ஜுலை13

கோப்பாய் வடக்கு சமூக சேவா சங்கப் பாலர் பகல்விடுதிக் கட்டடத் திறப்புவிழா நாளை புதன் கிழமை பிற்பகல் 4 மணிக்குச் சரவணபவானந்த வித்தியாசாலைக்கருகில் உள்ள விடுதி மண்டபத்தில் அதன் தலைவர் க.இ.குமாரசாமி தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்விற்கு விருந்தினர்களாக கோப்பாய் பிரதேச உதவிப் பிரதேச செயலர் க.இராசதுரை, யாழ்.சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி க.சிவராசா, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் ஆகியோர் கலந்துகொள்வர். (ஒ-72)

## விவசாயிகளுக்குப் பயிற்சிநெறி

வரணி,ஜுலை13

பழமரச் செய்கை, மரக்கறிச் செய்கை ஆகியவற்றுக்கான பயிற்சி நெறி யாழ்ப்பாணம் திருநெல்வேலி விவசாயத் திணைக்கள அலுவலகத்தில் விரைவில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியில் கலந்துகொள்ள விரும்பும் விவசாயிகள் தமது பெயர் விவரங்களை அவ்வப் பிரதேச விவசாய சம்மேளனங்கள் ஊடாகச் சமர்ப்பிக்கும்படி சாவகச்சேரி கமநல சேவை நிலைய விவசாயப் போதனாசிரியர் எஸ்.பாலகிருஸ்ணன் வேண்டுகோள் விடுத்துள்ளார். மேலும், நெல் வேளாண்மை சார்பான பயிற்சி நெறி ஒன்றும் வவுனியாவில் நடைபெறும் எனவும், அவர் கூறியுள்ளார். (ஒ-170)

## அநாதரவான மூதாட்டி மீட்பு

கோப்பாய்,ஜுலை13

கோப்பாய் மத்தி ஆசாரியார் வீதிப் பகுதியில அநாதரவாகக் கவனிப்பாரற்ற நிலையில் காணப்பட்ட மூதாட்டி ஒருவர் கோப்பாய் மத்தி கிராம அலுவலரால் அழைத்துச் செல்லப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை இருபாலை அன்னை திரேசா இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இந்த மூதாட்டி மூளாயைச் சேர்ந்தவரெனக் கூறினார் என்றும் - ஏனைய விவரங்கள் எதனையும் அவரால் கூறமுடியவில்லை என்றும் - கிராம அலுவலர் கூறினார். (ஒ-72)

# மருத்துவபீட மாணவர் ஒன்றியம் மாணவர் நலனுக்காகச் செயற்படும்

## நிலைமையை விளக்கி அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை13

மருத்துவபீட மாணவர் ஒன்றியம் மாணவர் நலனுக்காகச் செயற்படும்.

- இவ்வாறு யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

மருத்துவபீட மாணவி கி.புஸ்பமாலாவின் கோரிக்கை தொடர்பான நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையிலேயே இது குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் செல்வி புஸ்பமாலா சம்பந்தமான நிலைப்பாடுகள் ஆராயப்பட்டன. இதில் செல்வி கி.புஸ்பமாலா உண்ணாவிரதம் சம்பந்தமாகப் பத்திரிகைகளில் வந்த செய்திகளில் சில தெளிவின்மைகள் காணப்பட்டமை கவனத்தில் எடுக்கப்பட்டன. இது சம்பந்தமாக எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:-

மருத்துவபீட மாணவர் ஒன்றியம் கடந்த 7ஆம் திகதி மாணவி கி.புஸ்பமாலாவிடம் உண்ணாவிரதத்தை நிறுத்தும்படி தயவுடன் கேட்பதுடன் இந்த முரண்பாடுகள் சம்பந்தமாகச் சுமுகமான தீர்வு ஏற்படும் வரை எமது விரிவுரைகளைப் பகிஷ்கரிப்பதாகவும் முடிவெடுத்தோம். இம்முடிவு மனிதாபிமான ரீதியாக அவருடைய உடல்நிலை பாதிப்படையக் கூடாது என்பதற்காக மட்டுமே எடுக்கப்பட்டதேயன்றி அவருடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்காக அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மருத்துவபீட மாணவர் ஒன்றியம் அவருடைய கோரிக்கையை இயன்றளவு கவனத்தில் எடுத்துச் செயற்பட்டது என்பதையும ஒன்றியம் நிச்சயமாக மாணவாகளது நலனிற்காகச் செயற்படும என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது பொதுக்கூட்டத்தில் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலன்றி எதிர்வரும் காலங்களில் உண்ணாவிரதம் என்பதை மருத்துவர் மாணவர் ஒன்றியம் ஏற்றுக்கொள்ளாது.

பரீட்சை சம்பந்தமாக வினாத்தாள்களை மீள் திருத்தம் செய்வது தொடர்பாக எல்லா மாணவர்களையும் திருப்திப்படுத்த முடியாது என்பதால ஒன்றியம் எதிர்வரும் காலங்களில் அந்த விடயத்தில் தலையிடாது.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மாணவி புஷ்பமாலாவின் கோரிக்கைகள் தொடர்பாக மூவர் அடங்கிய குழு கடந்த 9ஆம் திகதி நியமிக்கப்பட்டு, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தமது பகிஷ்கரிப்பை இடைநிறுத்தி இருநாள்களின் பின்னர் மருத்துவபீட மாவணவர் ஒன்றியம் கூட்டமொன்றை நடத்தி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ-5-10)

# நீதிமன்றங்களும் சுகாதாரத்துறையும் லஞ்சம் பெறுவதில் முன்னிலையில்

இலங்கையில் லஞ்சம் பெறுவதில் நீதிமன்றங்கள், பொலீஸ்துறை மற்றும் சுகாதார்த் திணைக்களம் ஆகியனவே முன்னிலையில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்டியில் அக்குறணைப் பிரதேச வர்த்தகர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரமுகர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்ட கூட்டத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் உரையாற்றிய லஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணிப்பாளர்நாயகம் கே.ஏ.சந்திரரத்ன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 2001ஆம் ஆண்டில் லஞ்சக் குற்றச்சாட்டின் பேரில் இலங்கையின் பல பகுதிகளிலிருந்தும் சுமார் 168 பேர் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். லஞ்சம் பெறுபவர்கள் தமது வறுமையைப் போக்குவதற்காக இல்லாது தாம் சுகபோகமாக வாழவும், ஆடம்பர வாகனங்களை வாங்குவதற்குமே லஞ்சம் பெறுகின்றனர் என அந்த விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

லஞ்சம் பெறுவதில் நீதிமன்றம், பொலீஸ் திணைக்களம் மற்றும் சுகாதாரச் சேவைத் திணைக்களம் என்பவையே முன்னணி வகிக்கின்றன எனத் தெரியவந்துள்ளது. அத்துடன், இது தொடர்பான புகார்கள் இன்னும் கிடைத்த வண்ணமே உள்ளன.

இந்நடவடிக்கை ஒழிக்கமுடியாத, சர்வதேச மட்டத்தில் இடம்பெற்றுவரும் குற்றங்களுள் ஒன்றாக உள்ளது - என்றார். (ஒ-201)

## அரசியற் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜுலை13

சர்வதேசத் தமிழீழ மாணவர் பேரவையினால் நடத்தப்படும் சமகால அரசியற் கருத்தரங்கின் 15ஆவது தொடர்நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்குக் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

மேற்படி கருத்தரங்கில் 'சமகாலமும் சமூக அபிவிருத்தியும்' எனும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ.இரட்ணம் கருத்துரை வழங்குவார் (ஒ-201)

## சங்கானைப் பகுதிகளில் கட்டாக்காலி நாய்களால் தொல்லை

சங்கானைப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் கட்டாக்காலி நாய்களினால் பொதுமக்கள பல தொல்லைகளை எதிர்நோக்குகின்றனர். இந நாய்களினால் பலர் கடியுண்டும் உள்ளனர். சங்கானைச் சந்தை, மீன்சந்தை ஆகிய பகுதிகளில் நாய்களினால் அண்மையில் இருவர் கடியுண்டு, சிகிச்சை பெற்றுள்ளனர். (ஒ-29)




வலி.கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவையினால் நடத்தப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்கை நெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவம் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்றது.

வடக்கு - கிழக்கு முன்பள்ளி கல்வி நிறுவன யாழ். கல்விவலயத் தலைவர் சி.சிவராசா உரைநிகழ்த்துவதையும் அருகில் மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் உறுப்பினர் எஸ்.திருநாவுக்கரசு, விடுதலைப் புலிகளின் வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் யாழவன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் கிரி, வலி.கிழக்கு தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சி.சிவகடாட்சம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:வலி.கிழக்குச் செய்தியாளர்)

# கண்ணீர் அஞ்சலி



எமது துறையின் தொழில் நுட்ப உத்தியோகத்தர்

**திரு. க. சயந்தநாதன்**

அவர்களின் அன்புத் தந்தையார்

**பொன்னம்பலம் கதிர்காமநாதன்**

(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களது மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஏனையோருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி அவரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*பொருளியல் துறையினர்,*
*யாழ்.பல்கலைக்கழகம்.*

(34052)(11-18-32)

---

## கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய
# பெருவிழா 18-07-2004

கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய வருடாந்த உற்சவம் 09-07-2004 கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தினமும் ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. 17.07.2004 சனிக்கிழமை மாலை 5.30மணிக்கு நற்கருணை ஆராதனையும் நற்க்கருணைப் பவனியும் மறுநாள் 18.07.2004 ஞாயிறு காலை 7.30 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் தொடர்ந்து திருச்சொருப பவனியும் இடம்பெறும்.

**- பங்குத் தந்தையும்,**
**ஆலய அருள்பணிச்சபையும்.**

(சி-36143)

---

# நூலாசிரியரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்



முன்னாள் வங்கி முகாமையாளரும் அகில இலங்கை சமாதான நீதவானும் எமது கணனி போதனாசிரியருமான மதிப்புக்குரிய

**திரு.க.கமலசேகரம் அவர்களின் ஆக்கத்தில்**

கணனியின் வரலாறு, கணனி - விசைப்பலகை,
கணனி - தட்டெழுத்து - ஆங்கிலம்,
கணனி - தட்டெழுத்து - தமிழ்
CD இறுவட்டு 4 கணனி நூல்கள்

ஆகய ஜி.சீ.க (உ/த) மாணவருக்கும், சகல ஆரம்ப கணனி பயிலுநருக்குமுரிய ஐந்து ஆக்கங்களை நாளை 14ஜூலை2004, யாழ்.மத்திய கல்லூரியில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் தகவல் தொழில் நுட்பக்கழகம் - முறைசாராக கல்விப் பிரிவு கணனி பயிலுநர் கழகத்தினுடன் ஒன்றிணைந்து வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைகிறோம்.

இவ்வழாவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 2002ஆம், 2003ஆம் ஆண்டு முறை சாராக கல்விப் பழைய மாணவர்கள் அனைவரையும் பங்குபற்றி அன்னாரை வாழ்த்திச் சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

எமது ஆசான் மதிப்புக்குரிய திரு.க.கமலசேகரம் அவர்கள் மேன்மேலும் தமது ஏனைய வெளியீடுகள் மூலம் தகவல் தொழில் நுணுக்கத் துறைக்கு வளர்ச்சியும் சிறப்பும் சேர்க்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

**கணனி பயிலுநர் கழகம்,**
**முறைசாராக் கல்விப் பிரிவு, யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

(34047)(42)

---

உ
*அத்தியடியான் துணை*

# திருமண அழைப்பு

**அன்புடையீர்,**

ஸ்வஸ்தி ஸ்ரீ நிகழும் மங்களகரமான தாரண வருஷம் ஆனி மாதம் 30ஆம் நாள் (14.07.2004) புதன்கிழமை துவாதசித் திதியும் ரோகிணி நக்ஷத்திரமும் சித்தயோகமும் கூடிய முற்பகல் 8.54 மணிமுதல் 10.42 மணிவரையுள்ள சிங்க லக்கின சுபமுகூர்த்தத்தில்,



| | |
|---|---|
| *நாரந்தனை, சரவணை* | *கொழும்புத்துறை மேற்கு* |
| **நாகலிங்க ஐயரின்** *பௌத்திரனும்* | **தியாகராஜா ஐயரின்** *பௌத்திரியும்* |
| **சிவஸ்ரீ யோகீஸ்வரக் குருக்கள்** | **சிவகுமார சர்மா** |
| *தம்பதிகளின் கனிஷ்ட புத்திரனுமாகிய* | *தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியுமாகிய* |
| *சிரஞ்சீவி* **சுபாஸ்கர சர்மா** | *சௌபாக்கியவதி* **வைதேகி** |
| *அவர்களுக்கு* | *அவர்களை* |

கன்னிகாதானஞ் செய்து, திருமாங்கல்ய தாரண பாணிக்கிரகண விவாக வைபவம் சரவணை பள்ளம்புலம் முருகப் பெருமானதும், வேலணை முத்துமாரி அம்பாளினதும் நீர்வேலி காளி அம்பாளினதும் திருவருள் துணைகொண்டு,

**நீர்வேலி அருள்மிகு செல்லக்கதிர்காம சுவாமி ஆலய மண்டபத்தில நிகழ்த்தப்**

பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றார், உறவினர் அனைவரும் பந்துமித்திரர் சகிதம் வருகைதந்து முகூர்த்தத்தைச் சிறப்பித்து மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

சமாவர்த்தனம்:
**காலை 5 மணிக்கு மணமகன் இல்லம்**
**(யா/அத்தியடி பிள்ளையார் ஆலய மண்டபம்)**
வதூவரகிருகப் பிரவேசம்:
**மாலை 3 மணிக்கு மணமகன் இல்லம்**

*முக்கிய குறிப்பு:* **விருந்துபசாரம் 15.07.2004 வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு வேலணை முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில் நடைபெறும்.**

சிவஸ்ரீ நா.யோகீஸ்வரக் குருக்கள்-
ஸ்ரீமதி சுபதாம்பிகை அம்மா
தம்பதிகள்
பிள்ளையார் கோயில்,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

*(இருவீட்டார் அழைப்பு)*

பிரம்மஸ்ரீ தி.சிவகுமாரசர்மா-
ஸ்ரீமதி பிறேமாவதி
தம்பதிகள்
காளி கோயில், நீர்வேலி வடக்கு,
நீர்வேலி, யாழ்ப்பாணம்.

(34054)(24-11-18-32)

---

## அதிதியாளர் உரையும் கலந்துரையாடலும்

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்.பல்கலைக்கழக பொருளியல் துறை நடத்தும் அதிதியாளர் உரையும் கலந்துரையாடலும் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு பொருளியல்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் "அரச மாற்றமும் இலங்கை இனத்துவப் பிரச்சினையிலான இந்திய நிலைப்பாடும்" என்ற தலைப்பில் புதுடில்லி நூல் நிலையம் மற்றும் நேருதொல்பொருள் நிலையம் என்பவற்றின் முதுநிலை ஆய்வாளர் ஸ்ரீமோகன் கே.ரிக்கு உரையாற்றவுள்ளார். (4)

## வர்த்தமானி கிடைப்பதில் தாமதம்

வலி.மேற்கு,ஜூலை13

வர்த்தமானிகள் குறித்த காலத்தில் யாழ். மாவட்டத்தில் கிடைப்பதிலலை. இதனால் பரீட்சைகள், நியமனங்கள் ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் அனுப்பமுடியாமல் இருப்பதாக அரச அலுவலர்களும் வேலைதேடும் இளைஞர், யுவதிகளும் தெரிவிக்கின்றனர். யாழ்.மாவட்டத்தில் கடந்த சில மாதங்களாக வர்த்தமானிகள் விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய காலக்கெடு முடிவடைந்த பின்னரே பிரதேச செயலகங்களுக்கும் தபால் அலுவலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்படுகின்றன. இதனால் போட்டிப் பரீட்சைகளுக்கும் பதவிகளுக்கும் விண்ணப்பிக்கமுடியாமல் இருப்பதாக பலரும் தெரிவிக்கின்றனர். (ஒ-175)

## கட்டடத் தொகுதித் திறப்புவிழா

வலி.தெற்கு,ஜூலை13

சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயத்தில் ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி நாளை புதன்கிழமை காலை திறந்து வைக்கப்படவுள்ளது.

சுமார் ஆறு லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட இக்கட்டடத் தொகுதியை யாழ்ப்பாணக் கல்வித் திணைக்களப் பொறியியலாளர் எஸ். சிவநேசன் திறந்து வைப்பார். (10-152)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

யாழ்ப்பாணம்,ஜூலை13

கோண்டாவில் இந்துமகாவித்தியாலய பழைய மாணவர்சங்கத்தின் இவ்வாண்டுக்கான நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இ.இரத்தினதாசன் தலைவராகவும், சு.விசுவநாதன் செயலாளராகவும், செல்வன் பு.பரணிதரன் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (10-201)

## பாடசாலையில் தமிழ் விழா

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ்.ஆனைப்பந்தி மெதடிஸ் தமிஷன் வித்தியாலயத்தின் தமிழ்விழா இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் எஸ்.சோமேஸ்வரபிள்ளை தலைமையில் பாடசாலையின் பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்.கல்வி வலய உதவி கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (10-201)

## ஆங்கிலக்கல்லூரி திறப்புவிழா

யாழ்ப்பாணம்,ஜூலை13

இல.105, அரசடி வீதி, யாழ்ப்பாணம் என்னும முகவரியில் அமைந்துள்ள லண்டன் ஆங்கிலக கல்லூரியின் (London English College) திறப்புவிழா நாளை புதன்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (10-201)

## ஆங்கில ஆசிரியர் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,ஜூலை13

சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறிக்கான விண்ணப்பங்களைப் பட்டதாரிகளிடமிருந்து கோரியுள்ளது.

விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்திசெய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'ஆங்கில ஆசிரியர் பயிற்சி நெறி' எனக் குறிபபிட்டு தலைவர், தலைமைச் செயலகம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம் எனனும் முகவரிக்கு எதிர்வரும் 31ஆம் திகதி அன்றோ அலலது அதற்கு முன்பாகவோ கிடைக்குமாறு அனுப்பிவைக்கப்படவேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இலவசமாக வழங்கப்படவுள்ள இப்பயிற்சி நெறி, ஆறுமாத பயிற்சிக் காலத்தைக் கொண்டது என்றும் -

பயிற்சிக் காலத்தின்போது கொடுப்பனவு வழங்கப்படவுள்ளதாகவும் - சர்வதேசத் தமிழீழ மாணவர் பேரவை தெரிவித்துள்ளது.(ஒ-201)

---

## நிர்வாக இலிகிதர் தேவை

எமது அரசடி விநாயகர் ஆலயத்துக்கு நிர்வாக இலிகிதர் ஒருவர் தேவை. தகுதியுடையோர் விண்ணப்பங்களை ஆலய காரியாலயத்தில் சமர்ப்பிக்கவும்.

கோயிலுக்கு அருகில் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

நிர்வாக சபையினர்.
**அரசடி விநாயகர் ஆலயம்,**
**மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.**

(34051)

---

# அறிவித்தல்

இத்தால் சகலருமறிக, இல.27, முதலியார் ஒழுங்கை, நாவலா வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த **திருமதி இராஜேஸ்வரி கந்தையா** என்பவர் 28.02.1988ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு என்.தில்லைநாயகம் முகதாவில் 3286 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி அரியாலை இறையில் உள்ள "எருமைச்சி வளவு" என்ற நாமமுடைய 2 பரப்பு விஸ்தீரணம் உடைய ஆதனம் கடந்த 55 வருடங்களாக தனது தொடர்ச்சியான முறிவற்ற எவரது எதிரற்ற ஆட்சியில் இருந்து வருவதாகவும், இதன் சோலைவரிப் பெயர் *திரு.ஏ.கந்தையா, திரு.கே. சின்னத்துரை* ஆகிய வேறு இரு பெயர்கள் சேர்ந்து சோலைவரிப் பதிவேட்டில் காணப்படுவதாகவும் இவர்கள் இவ்வாதனத்துடன் தொடர்புடையவர்கள் அல்ல எனவும் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பாக ஏ.கந்தையா, கே.சின்னத்துரை மற்றும் எவருக்காவது உரிமை இருப்பின், உரிமைப் பாதிப்பு இருப்பின் இன்றில் இருந்து ஒரு மாதகாலத்திற்குள் எதிர்ப்பினை எனக் குத் தெரிவிக்குமாறு வேண்டுவதுடன் எவ்வித எதிர்ப்பும் குறித்த ஒரு மாத காலத்துக்குள் செய்யப்படாதிருப்பின், பின் சோலை வரிப் பெயர் மாற்றம் தொடர்பாக எவ்வித ஆட்சேபத்தையும் செய்யும் உரிமையை இழப்பர் என்றும் இத்தால் அறியத்தருகிறேன்.

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
08.07.2004

ஆணையாளர்,
**மாநகரசபை,**
**யாழ்ப்பாணம்.**

(34045)(43-21-11-19)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை
# கேள்வி அறிவித்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகளை நிறைவேற்றுவதற்கு இக்ராட் (ICTAD) நிறுவனத்தில் பதிவுசெய்துள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கிடப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பல்கலைக்கழகக் கேள்விச் சபைத் தலைவரால் 30.07.2004 பிற்பகல் 3.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.**

பணி விவரம்:

1. ஆனந்தகுமாரசுவாமி பெண்கள் விடுதியில் துவிச்சக்கர வண்டிகளுக்கான தரிப்பிட வசதிகளை மேம்படுத்தல்.
2. பிரதான நீர்த்தாங்கிக்கெதிராக உள்ள காணியில் முட்கம்பி / வேலி எல்லை மதில் மற்றும் வாசல் கதவு அமைத்தல்.

**மேற்படி பணிகள் பற்றிய கேள்விப்பத்திரங்கள் பெற விரும்புவோர் மீளிக்கப்படமுடியாத கட்டணமாக ஒவ்வொரு பணிக்கும் ரூபா 300/= பல்கலைக்கழகத்தின் காசாளர் கருமபீடத்தில் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து உதவிப் பதிவாளர் நிர்வாகம் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.**

**கேள்விப் பத்திரங்களைப் பெறுவதற்கான கடைசித் திகதி: 26.07.2004 ஆகும்.**

**பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் 30.07.2004 பிற்பகல் 3.00 மணிக்கு முன்னதாக இடப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்ப விரும்புவோர் கடித உறையின் மேலுறையில் பணியைக் குறிப்பிடல் அவசியமானதாகும். குறிப்பிட்ட திகதி, நேரத்துக்குபின்னர் கிடைக்கப்பெறும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

**தேவைப்படின் கேள்விப் பத்திரங்களை நிர்வாகக் கிளையில் அலுவக நேரங்களில் கட்டணமின்றிப் பரிசீலிக்கலாம்.**

**துணைவேந்தர்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**
**12.07.2004**

தபால் பெட்டி இல. 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(சி-36147) (24-11-19-32)

---

# மரண அறிவித்தல்கள்

## இராசையா இரவிச்சந்திரன்

**(அராலி வீதி, சங்கானை)**

அராலி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா இரவிச்சந்திரன் அவர்கள் 08.07.2004 வியாழக்கிழமை ஜேர்மனியில் அகால மரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2004) செவ்வாய்க் கிழமை ஜேர்மனியில் நடைபெறும்.

*குறிப்பு:* நேற்றைய உதயன் நாளிதழ் 4ஆம் பக்கத்தில் பிரசுரமான மரண அறிவித்தலில் இறந்தவரின் பெயர் இராசையா இராமச்சந்திரன் என்று தவறுதலாக வெளிவந்துவிட்டது. திருத்தி வாசிக்கவும்.

அன்னாரின் ஞாபகார்த்தமாக சங்கானை இல்லத்தில் இன்று துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

*அராலி வீதி,*
*சங்கானை.*

தகவல்:
ஆ.இராசையா (தந்தை).

(சி-36134)(21-11-19)

## மயில்வாகனம் முருகுப்பிள்ளை



புலோலி மேற்கு, தம்பசிட்டியைச் சேர்ந்த மயில்வாகனம் முருகுப்பிள்ளை கடந்த சனிக் கிழமை (10-07-2004) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் - பாறுபதி தம்பதிகளின் அன்பு மகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் பிரபாகரனின் (ஜேர்மனி) அன்புத் தந்தையாரும் விக்கினேஸ்வரியின் (ஜேர்மனி) அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான பாக்கியம், நடராசா, பொன்னுத்துரை, தங்கம்மா மற்றும் குமாரசாமி, நாகம்மா, சிவக்கொழுந்து, பத்தினி, வேலாயுதம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிசாந், செந்துஜன், சாளினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (14-07-2004) புதன் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக பிற்பகல் 3 மணிக்கு எரிஞ்சஅம்மன் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தம்பசிட்டி,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

தகவல்:
ந.ரகு (பெறாமகன்).

(சி-36144) (26-21-19-11)

# இந்திய கிரிக்கெட் அணி இன்று இலங்கை வருகை

சென்னை,ஜுலை13

எதிர்வரும் 16ஆம் திகதி கொழும்பில் ஆரம்பமாகவுள்ள ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் கலந்துகொள்ளவுள்ள இந்திய அணி இன்று கொழும்பை வந்தடையவுள்ளது.

16ஆம் திகதி முதல் ஓகஸ்ட் முதலாம் திகதி வரை நடைபெறவுள்ள் இப்போட்டியில் 6 அணிகள் பங்கேற்கின்றன. அவை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

'ஏ' பிரிவில் பாகிஸ்தான், பங்காளதேஷ், ஹொங்ஹொங் அணிகளும் 'பி' பிரிவில் இந்தியா, இலங்கை, ஐக்கிய அரபு எமிரேட்ஸ் ஆகிய அணிகளும் அடங்கியுள்ளன.

லீக்போட்டிகளின் முடிவில் இரண்டு பிரிவிலும் முதல் இரண்டு இடங்களைப்பிடிக்கும் அணிகள் இரண்டாவது சுற்றுக்கு தகுதி பெறும். 2ஆவது சுற்றில் 4 அணிகளும் ஒன்றோடு ஒன்று மோதும்.

புள்ளிகளின் அடிப்படையில் முதலிரண்டு இடங்களைப்பிடிக்கும் அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறும்.

இந்தப்போட்டிக்காக இந்திய வீரர்களின் இறுதிக்கட்டப் பயிற்சி முகாம் சென்னையில் நடந்தது.

கடந்த 3ஆம் திகதி முதல் 8ஆம் திகதி வரை வீரர்கள் பயிற்சி பெற்றனர்.

இன்று இந்திய அணி சென்னையில் இருந்த இலங்கை வருகிறது. இந்திய அணி தொடக்க ஆட்டத்தில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் அணியை எதிர்வரும் 16ஆம் திகதி எதிர்கொள்கிறது. 18ஆம் திகதி இலங்கை அணியை எதிர்கொள்ளவுள்ளது. (10)

# முத்தரப்புக் கிரிக்கெட் தொடரில் நியூஸிலாந்து அணி சம்பியனானது

லண்டன்,ஜுலை13

இங்கிலாந்தில் நடைபெற்ற முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடரில் நியூ ஸிலாந்து அணி 107 ஓட்டங்கள் வித்தியா சத்தில் மேற்கிந்திய அணியை வெற்றீட்டி தொடரில் சம்பியனாகியுள்ளது.

நியூஸிலாந்து மேற்கிந்திய, இங்கிலாந்து அணிகள் பங்கேற்ற முத்தரப்பு ஒருநாள் தொடரில் நியூஸிலாந்து, மேற்கிந்திய அணிகள் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன. இறுதிப் போட்டி லோர்ட்ஸ் மைதானத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணித் தலைவர் பிளமிங், ஆஷ்லே ஜோடி சிறப்பான ஆரம்பத்தை ஏற்படுத்தியது. பிளமிங் 67 ஓட்டங்களையும், ஆஷ்லே 57 ஓட்டங்களையும், மார்ஷல் 44 ஓட்டங்களையும் எடுத்தனர். இதன் பின்பு துடுப்பெடுத்தாடியவர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க நியூஸிலாந்து அணி 49.2 ஓவர்களில் 266 ஓட்டங்களைப் பெற்றது.

வெற்றிக்கு 267 ஓட்டங்கள் என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்தியத் அணிக்கு ஆரம்பமே சரியில்லை. கெய்ல் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். ஸ்மித் 44, லாரா 30 ஓட்டங்களை எடுத்தனர். அடுத்து வந்தவர்களை டானியல் வெட்டோரி துவம்சம் செய்தார். 159 ஓட்டங்களில் சுருண்டது மேற்கிந்திய அணி.107 ஓட்டங்கள் வித்தியாசத்தில் போட்டியை வென்று சம்பியன் பட்டத்தை நியூஸிலாந்து அணி கைபற்றியது. டானியல் வெட்டோரி 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றி ஆட்டநாயகன் விருதைப்பெற்றுக்கொண்டார். (10)

# முதியவர்களுக்கான ஓட்டப் போட்டியில் நூறு வயது முதியவர் சாதனை!



கேப்டவுண்,ஜுலை13

தென்னாபிரிக்காவில் அண்மையில் நடைபெற்ற முதியோருக்கான தடகளப் போட்டியில் 100 வயதான பிலிப் என்பவர் 100 மீற்றர் ஓடடத்தில் புதிய சாதனை படைத்துள்ளார்.

ஏற்கனவே இருந்த ஆஸ்திரேலிய முதியவர் ஒருவரின் 36.10 செக்கன்கள் என்ற சாதனையை முறியடித்து 26.17 செக்கன்கள் என்ற புதிய சாதனையை இவர் நிலைநாட்டியுள்ளார்.

ஆயினும், இவர் படைத்த சாதனையைப் பதிவுசெய்த கருவியில் ஏற்பட்ட கோளாறினால் இவரது சாதனையை பதிவுசெய்யப்படவில்லை.

இதுகுறித்து அந்த முதியவர் கருத்துத் தெரிவிக்கையில்:

பதிவுசெய்யும் கருவி என்னை இப்படி ஏமாற்றும் என்று நினைக்கவில்லை. ஆயினும் ஒக்ரோபர் மாதத்தில் நடைபெறவுள்ள அடுத்த போட்டியில் இச்சாதனை முறியடித்துப் புதிய சாதனை படைப்பேன் என அவர் தெரிவித்துள்ளார். (10)

# விளையாட்டு

# ஒலிம்பிக்கில் தங்கம் வென்றால் ஒரு கோடி ரூபா பரிசளிக்கப்படும்

## ஜார்க்கண்ட் மாநில முதல்வர் அறிவிப்பு

புதுடில்லி,ஜுலை13

அடுத்த மாதம் நடைபெறவுள்ள எதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இந்தியாவின் ஜார்க் கண்ட் மாநிலத்தைச் சேர்ந்த வீரர்கள் தங்கம் வென்றால் ஒரு கோடி ரூபா பரிசாக வழங்கப் படும் என்று மாநில முதல்வர் அர்ஜுன்முண்டா அறிவித்துள்ளார்.

ஜாம்ஜெட்பூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் வகையில் இப்பரிசுத் தொகை வழங்கப்படவுள்ளதுடன் மாநிலத்தில் விளையாட்டுத்துறையை மேமபடுத்த அனைத்து உதவிகளையும் அரசு செய்யும.

விரைவில் அனைத்துப் பாடசாலைகளிலும் விளையாட்டுப் பயிற்சி அளிக்க 5000 விளையாட்டுத்துறை ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் எனவும் முண்டாதெரிவித்துள்ளார். (10)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,ஜுலை13

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அவையினால் நடத்தப்படும் கழகங்களுக்கிடையிலான ஹொக்கி சுற்றுப்போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:

✪ பி.ப. 4மணி - கோப்பாய் ஐக்கிய வி.க எதிர் சென்றலைட்ஸ் வி.க.

✪ மாலை 5மணி - யாழ்ப்பாணக் கல்லூரி அணி எதிர் யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு விஞ்ஞான அலகு அணி

(10-190)

★ ★ ★ ★

யாழ்.உதைபந்தாட்ட லீக்கில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ள ஆட்டங்கள் வருமாறு:

✪ பி.ப. 4.15 மணி யுத்கா வி.க. எதிா கிறின்கிங்ஸ் வி.க.

✪ மாலை 5.15 மணி சென்.மைக்கல் வி.க எதிர் பாடும்மீன் வி.க. (10-190)

★ ★ ★ ★

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனமும இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கமும் இணைந்து நடத்தும் 15 வயதுக் குட்பட்டோருக்கான பாடசாலை மட்டத்திலான உதைபந்தாட்டப் போட்டி யாழ்.மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்தின் ஐந்து கல்வி வலயங்களின் பாடசாலைகளுக்கிடையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டியில் இருந்து ஓர் அணி தெரிவு செய்யப்பட்டு கொழும்பில் நடைபெறவுள்ள போட்டிக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இந்த உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டி இவ்வார இறுதியில் ஆரம்பாகவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (10-190)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை13

இலங்கை உதைபந்தாட்டச் சம்மேளனத்தின முன்னாள் தலைவர் அமரர் ரி.ஆனந்தராஜா ஞாபகார்த்த வெற்றிக்கிண்ணத்திற்கான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி யாழ். மாவட்டத்தில் நடைபெறவுள்ளது.

இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டிக் கான சகல ஏற்பாடுகளையும் யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக் மேற்கொண்டுவருகிறது.

இந்தச் சுற்றுப்போட்டி ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் நடைபெறும் என யாழ். மாவட்ட உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் கிளிபேர்ட் அன்ரனிப்பிள்ளை தெரிவித்தார்.

(10-190)

★ ★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜுலை13

சுன்னாகம்,மயிலணி ஜனசக்தி சனசமூக நிலையம் நடத்தும் ஜனசக்தி முன்பள்ளி விளையாட்டுப் போட்டி நாளை புதன்கிழமை பிறபகல் 2.30 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் திருமதி கௌரி ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதமவிருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் கலந்துகொள்ளவுள்ளார். (10)

### கரும்புலிகள் நாளையொட்டிய

# தடகள விளையாட்டுப் போட்டியின் போது தேசிய மட்ட வீரர்கள் கௌரவிக்கப்பட்டனர்

வலி.வடக்கு,ஜுலை13

கரும்புலிகள் நினைவு நாளையொட்டி தமிழீழ விளையாட்டுத்துறையினால் வடக்கு - கிழக்கு மாகாண மட்டத்தில் கடந்த 3ஆம், 4 ஆம திகதிகளில் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தப்பட்ட இளையோருக்கான தேசிய தடகள விளையாட்டுப் போட்டியின்போது தேசிய மட்டத்தில் வெற்றியீட்டிய கனிஷ்ட வீரர்களும் முன்னாள் வீரர் ஒருவரும் கௌரவிக்கப்பட்டனர்.

1959ஆம் ஆண்டில் அகில இலங்கை மட்டத்தில் கோலுன்றிப் பாய்தல், தத்தி மிதித்துப் பாய்தல் போட்டிகளில் வெற்றிகளையீட்டிய தென்மராட்சியைச் சேர்ந்த வைத்திலிங்கம் வாமதேவனுக்கு தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா பதக்கம் அணிவித்துக் கௌரவித்தார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற கனிஷ்ட பிரிவுப் போட்டிகளில் கலந்துகொணடு வெற்றியீட்டிய வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 9 பேர் பணப்பரிசில்கள் வழங்கப்பட்டுக் கௌரவிக்கப்பட்டனர்.

திருமலை மாவட்டத்தைச் சேர்ந்த கே.ரி. எம்.கலீப் 200 மீற்றர், 400 மீற்றர் ஓட்டப் போட்டி



களில் தங்கப்பதக்கம் வென்றமைக்காகவும் எம்.சி.எம்.றிஸ்லி ஈட்டி எறிதலில் தங்கப் பதக்கம் வென்றமைக்காகவும் சுரேஸ் சுசந்தா 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்றமைக்காகவும் கௌரவிக்கப்பட்டனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். தினேஸ் உயரம் பாய்தலில் வெள்ளிப்பதக்கம் வென்றமைக்காகவும் ஏ.எம்.றொட்கவுஸ் நீளம் பாய்தலில் வெள்ளப்பதக்கம் வென்றமைக்காகவும் கௌரவிக்கப்பட்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த ரீ. தாரணி குண்டு எறிதலில் வெண்கலப்பதக்கம் வென்றமைக்காகக் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த மரியநாயகம் சஞ்சி 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் வெள்ளப் பதக்கம் வென்றமைக்காகவும் துயாளினி செல்வராசா தத்திமிதித்துப் பாய்தலில் வெண்கலப் பதக்கம் வென்றமைக்காவும் சிவகுமார் கமலமோகன் உயரம் பாய்தல் போட்டியில் வெண்கலப்பதக்கம் வென்றமைக்காகவும் கௌரவிக்கப்பட்டுள்ளனர். (10-86)

# மாகாணப் பாடசாலைகள் விளையாட்டு விழாவில் பெருவிளையாட்டுக்களில் வெற்றியீட்டியோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜுலை13

வடக்கு-கிழக்கு மாகாணப் பாடசாலைகளுக கிடையே இடம்பெற்றுவரும் 9ஆவது விளையாட்டு விழாவின் பெருவிளையாட்டுக்களில் முதல் மூன்று இடங்களையும் பெற்ற பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**உடற்பயிற்சி**

ஆண்கள்: முதலாமிடம் - (ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாலயம்), இரண்டாமிடம் (ஹாட்லிக் கல்லூரி), மூன்றாமிடம் (முழங்காவில் மகாவித்தியாலயம்).

பெண்கள்: முதலாமிடம் (வவுனியா, றமபைக் குளம் மகளிர் மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் (இராமநாதபுரம் மேற்கு வித்தியாலயம்), மூன்றாமிடம் (உடுவில் மகளிர் கல்லூரி).

**கபடி**

பெண்கள்: முதலாமிடம் (வவுனியா, சிவப் பிரகாச மகளிர் கல்லூரி), இரண்டாமிடம் (வவுனியா, ஞானேஸ்வரா மகாவித்தியாலயம்), மூனறாமிடம் (திருகோணமலை, அக்கபோதி தேசிய பாடசாலை).

**எல்லே**

பெண்கள்: முதலாமிடம் (மட்டு.செங்கலடி மத்திய கல்லூரி), இரண்டாமிடம் (அம்பாறை, நாமாள் தலாவ மகாவித்தியாலயம்), மூன்றாமிடம் (திருகோணமலை, அபயபுரம் மகாவித்தியாலயம்).

**கரபந்தாட்டம்**

பெண்கள்: 15 வயதுப்பிரிவு - முதலாமிடம் (அம்பாறை, சன்துன்புர வித்தியாலயம்), இரணடாமிடம் (அம்பாறை குளுணுகே மகாவித்தியாலயம்), மூன்றாமிடம் (திருகோணமலை ஸ்ரீ சுமதங்கார மகாவித்தியாலயம்).

**17 வயதுப்பிரிவு:**

முதலாமிடம்- (அம்பாறை, டி.எஸ்.சேனநாயக்க மத்திய மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் (அம்பாறை, தமட்டமல்ல பலஸ்ஸ மகாவித்தியாலயம்), மூன்றாமிடம் (திருகோணமலை, மகிந்தபுர, மகாவித்தியாலயம்).

**19 வயதுப்பிரிவு:**

முதலாமிடம்- (அம்பாறை, டி.எஸ்.சேனநாயக்க மகாவித்தியாலயம்), இரண்டாமிடம் (அமபாறை, நுவர கலதென்ன மகாவித்தியாலயம்), (மட்டு. சென்.சிசிலியாஸ் பெண்கள் மகாவித்தியாலயம்) (10-5)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

தனியார் பாவனையில் உள்ள HONDA CD 50 கறுப்பு நிறம், 500 - இலக்கமுடையது விற்பனைக்குண்டு. தொடர்பு: சிவஞானசுந்தரம், "வாழ்வகம்", மருதனார்மடம். (சி-36129)

"ஸ்ருபன மஞ்சரி" 2ஆம் பதிப்பு விற்பனைக் குண்டு. ரூபா 200/=. சிதம்பரநாதக் குருக்கள், கல்வயல், சாவகச்சேரி. (சி-36127)

ENxxxx இலக்கமுடைய Morisminer கறுப்புநிறக் கார் நல்ல நிலையில் விற்பனைக் குண்டு. தொடர்பு: T.P.: 0602-213472 அல்லது 021-222-5414. (சி-36128)

## வீடு, வளவு உடன் விற்பனைக்கு

கத்தரப்படி வீதி, நுணாவில் கிழக்கு, சாவகச்சேரியில் வீட்டுடன் 6பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: விக்னேஸ்வரன் (விககி) T.P.: 024-222-3006, 077 - 6172831. (34018)

## வீடு விற்பனைக்கு

"குருவளை" அளவெட்டி தெற்கில் வீட்டுடன 8 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 08, நாவலடி லேன், திருநெல்வேலி.
T.P.: 077 - 6309947. (34044)

## வாகனம் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மொறிஸ்மைனர் கார் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: Mr. ரங்கநாதன் பத்மநாதன், 74B, பஜார் வீதி, வவுனியா. T.P.: 0244 - 589384. (34032)

## இறைச்சிக் கோழி தேவை

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச்சிக்கோழிகள் உடன் தேவை. கூடுதல் விலை தரப்படும். தொடர்பு:- சிவா, இராமலிங்கம் வீதி, முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (34038)

## நாய்களுக்குத் தடுப்பூசி

நவாலி,ஜூலை13

மானிப்பாய்ப் பிரதேச சுகாதாரப் பகுதியினர் எதிர்வரும் 15ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் சுதுமலை மத்திய ச.ச.நிலையத்திலும் 11 மணி முதல் சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையத்திலும் வைத்து வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி ஏற்றவுள்ளனர். (ஓ-100)

## ஆங்கில டிப்ளோமா பரீட்சை

யாழ்ப்பாணம்,ஜூலை13

யாழ். பல்கலைக் கழகத்தினால் நடத்தப்பட்டுவரும் நிர்வாக உத்தியோகத்தர்களுக்கான ஆங்கில டிப்ளோமா பரீட்சை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மேற்படி பரீட்சைக்குத் தோற்றவுள்ள பரீட்சார்த்திகள் யாழ். பல்கலைக் கழகப் பரீட்சைகள் அனுமதிக் கிளையில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்திசெய்து எதிர்வரும் 23ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ அக் கிளையில் ஒப்படைக்குமாறு துணைவேந்தர் கேட்டுள்ளார். (ஓ-201)

# பிரதேசசபை உப அலுவலகங்களில் அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்கள்

அச்சுவேலி,ஜூலை13

பிரதேச சபை உப அலுவலகங்களின் அபிவிருத்திப் பணி தொடர்பான செயற்பாடுகளில் ஆலோசனை வழங்கி அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு வசதியாக அபிவிருத்தி ஆலோசனைக் குழு நிறுவப்பட்டு வருகின்றது.

மக்கள் பிரதிநிதித்துவம் இல்லாமல் பிரதேச சபையின் செயற்பாடுகள் நடைபெறுவதால் ஏற்படும் தவறுகளைச் சீர்ப்படுத்துவதற்கு வசதியாக அபிவிருத்தி ஆலோசனைக் குழுக்கள் நிறுவப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

உப அலுவலகங்களின் பொறுப்பதிகாரிகளைத் தலைவராகக் கொண்டு செயற்படும் அபிவிருத்தி ஆலோசனைக் குழுவில் உள்ளூர் பிரமுகர்கள் உறுப்பினர்களாக இருந்து ஆலோசனை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (ஒ-13)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 05 | 13 |
| 06 | 07 |
| 1941 | 2002 |

அமரர்
**கந்தையா இராஜரட்ணம்** (மாமா)

பாசத்தின் திருவுருவே!
பண்பின் உறைவிடமே!!
ஈராண்டுகள் சென்றாலும்
மாறாது உம் நினைவு!

உங்கள் பிரிவால் துயருறும்:
மருமக்கள்.

கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (39030)(14-18-26)

## மனோதத்துவ வைத்தியம்
## (GENERAL PSYCHO THERAPY)

இப்பொழுது யாழ்ப்பாணத்தில் 13.07.2004 - 16.07.2004 வரை
*முன்கூட்டியே பதிவுசெய்யவும்*

இளைஞர்களே!
★ சக்தி குறைவு ★ ஞாபக மறதி ★ பயம்
★ ஆளுமைக்குறைவு ★நடுக்கம் ★நித்திரைக் குறைவு

என்பவற்றால் தாழ்வு மனப்பான்மையா?

கவலையை விடுங்கள். ஆரம்ப மனநோய் பாதிப்பு உடனடியாக நீங்க என்னுடன் உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்! ஆண்மைச்சக்தி குறைவுதான் உங்கள் கவலையா? மனோதத்துவ வைத்தியத்தாலும் மூலிகை மருந்துகளாலும் வெற்றிபெறலாம். பலர் இங்கே சிகிச்சை பெற்றுப் பூரணசுகமடைந்தமைக்கு ஆதாரம் உண்டு.

குறிப்பு: இறுதிநேரத்தில் வருவதைத் தவிர்க்கவும்.

தொடர்புகளுக்கு: பலரது பாராட்டைப்பெற்ற
பிரபல மனோதத்துவ நிபுணர்
**Dr.P.ஆறுமுகம் S.M.P.**
A.S.N. சுற்றுலா விடுதி,
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
(பெருமாள் கோயிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்).
Govt. Regd. No. 9492
Hot Line: 0777-569205 T.P.: 3181, 5399
(முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்)

(சி-36258)(26-14-18)

## திருமணநாள் ஒத்திவைப்பு

நாளை (14.07.2004) புதன்கிழமை நடைபெறவிருந்த

மணமகன் இந்திரகுமாரன்
மணமகள் பங்கயற்செல்வ

ஆகிய இருவரினதும் திருமண வைபவம் தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்பதைச் சகலருக்கும் அறியத் தருகின்றோம்.

*திரு. இ. சண்முகநாதன்,*
*ஆச்சாரியார் குடும்பத்தினர்,*
*பத்திரகாளி கோயிலடி,*
*சுழிபுரம்.*

*திரு. ஆ. சின்னத்துரை,*
*ஆச்சாரியார் குடும்பத்தினர்,*
*134, கச்சேரி நல்லூர் வீதி,*
*நல்லூர்.*

இரு வீட்டார் அறிவிப்பு
(34042)(43-14-18-26)

## கணக்கு எழுதுநர் தேவை

*தனியார் நிறுவனம் ஒன்றிற்குப் பகுதிநேர கணக்கு எழுதுநர் தேவை.*
தகைமை: G.C.E A/L வர்த்தகப்பிரிவு சித்தி.
25.07.2004 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.
தொடர்புகளுக்கு: மு.கிரிதரன்,
மம்மி சிற்றி,
மயிலணி, சுன்னாகம்.
(34041)

## நெஞ்சில் நிறைந்த சஞ்சீ...
## நான்காவது ஆண்டு நினைவலைகள்



*அமரர் சோமசுந்தரம் சஞ்ஜீவன்*
யாழ்.இந்துக் கல்லூரி மாணவன்
(உயர்தர கணிதப்பிரிவு - 2001)

| படைப்பு | அழிப்பு |
|---|---|
| 26-07-1982 | 13-07-2000 |

*ஆண்டுகள் நான்கு ஆனாலும்*
*ஆறவில்லையே எம் இதயம்*
*ஆத்ம சாந்திக்காக ஆண்டவனைப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

*122 9/6,பூநாறி லேன்,*
*கே.கே.எஸ்.றோட்,*
*யாழ்ப்பாணம்.* (34040)(42-14-18-26)

த.க.சோமசுந்தரம்
குடும்பத்தினர்.

## மனமுவந்து பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்



வங்கி வாடிக்கையாளரின் தேவைகளை, குறைகளை மிக நுணுக்கமாகக் கேட்டறிந்து அலசி, ஆராய்ந்து வங்கியின் சட்ட திட்டங்களுக்கமைவாக அவர்களுக்கு வழிகாட்டி, அவர்களை உயர்ச்சி அடைய வைத்த திருவாளர் துரைசிங்கத்தின் பெருமகன் உதவிடும் உள்ளத்தைக் கொண்ட

**திரு. து.ரகு**

அவர்கள் ஸ்ரான்லி வீதி, மக்கள் வங்கிக்கிளை முகாமையாளர் பதவியிலிருந்து தரமுயர்த்தப்பட்டு உதவிப் பிராந்திய முகாமையாளராகப் பதவியேற்றதையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

வாடிக்கையாளரின் நன்மதிப்பைப் பெற்ற அவர்கள் மேன்மேலும் உயர்ச்சி அடைய, எழுச்சி அடையப் பாராட்டி வாழ்த்துவதுடன், அவருக்கு எல்லாம்வல்ல இறைவனின் அருள் கிடைக்கவேண்டி நிற்கின்றோம்.

உரிமையாளர்:
**கிருஸ்ணா கொன்றாக்ரேஸ்,**
கண்டி வீதி, பளை,
உரிமையாளர்:
**பாமினி என்ஜினியேர்ஸ் அன் கொன்றாக்ரேஸ்,**
கோண்டாவில்.
(34043)(42-14-18-26)


DIPLOMA IN PROFESSIONAL MICROSOFT OFFICE XP / 2003
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
DIPLOMA IN COMPUTER HARDWARE ENGINEERING
DIPLOMA IN VISUAL BASIC
DIPLOMA IN VISUAL FOXPRO
DIPLOMA IN AUTOCAD
DIPLOMA IN C++
DIPLOMA IN NETWORK ENGINEERING

ஆரம்பம்
16,18.07.2004

அனேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் புதிய பிரிவுகள் ஆரம்பம்

Softview Computer College
www.scclanka.com
43, Arasady Road,
Thaddatheru Junction,
Jaffna, Sri Lanka.
T.P: 021 2225170

scclanka@hotmail.com
Arya Gowdar Road,
West mambalam Road,
Chennai 600 033, India.
T.P: +91-44-4891286


## வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, கரவெட்டி
## நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.3, நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை ஆகியவற்றிற்கான பகிரங்க மீள் ஏல விற்பனை அறிவித்தல் - 2004

*01. கேள்வி வைப்பு ஏற்றுக்கொள்ளும் திகதி 20-07-2004 மு.ப. 10.00 மணி*
*02. ஏலம் நடைபெறும் திகதி 20-07-2004 மு.ப. 11.00 மணி*
*03. கேள்வித் தொகைக்குப் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15% சேர்த்து அறவிடப்படும்.*
*04. மேலதிக விவரங்களைத் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.*

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித்தொகை | மீளளிக்கப்படும் கேள்விவைப்புப் பணம் |
|---|---|---|
| நெல்லியடி உப அலுவலகம் | | |
| 01.நெல்லியடி ஆட்டிறைச்சிக் கடை இல.3 | 11340/- | 500/- |
| 02.நெல்லியடி மாட்டிறைச்சிக் கடை | 80,000/- | 3,000/- |

**திரு.ஏ.எம்.ஜோசெப்,**
செயலாளர்,
வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச சபை, கரவெட்டி.
08-07-2004. (சி-36142) (26-14-18)

## யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் இலங்கை
## வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
## வெளிவாரிப் பரீட்சை
## பொதுக்கலைமாணித் தேர்வு பகுதி -I- 2001

மேற்படி பரீட்சை 26.07.2004 திங்கட்கிழமை தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பமாகின்றன. இம்முறை இப்பரீட்சை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள பரீட்சை நிலையத்தில் மட்டும் நடைபெறும். நேர அட்டவணைகளையும் பரீட்சை அனுமதி அட்டைகளையும் அலுவலக நேரத்தில் 19.07.2004 ஆம் திகதி முதல் யாழ்.பல்கலைக்கழக வெளிவாரிப் பதிவுகள் பரீட்சைகள் அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விவரங்களுக்கு 021-222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

12.07.2004 (சீ-36151) (40-12-17-36) - துணைவேந்தர்.

## பாடசாலை அதிபர்களே! மாணவ மணிகளே!

உங்களுக்குத் தேவையான சகலவிதமான புத்தகங்களும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்ளப் புத்தகக் கடல் 10%-50% கழிவு வழங்கப்படும்.

ஒரு சில மருத்துவ, பொறியியல், கணனிப் புத்தகங்கள், ஆங்கிலம் கற்றுக்கொள்ள பாடசாலை மாணவர்களுக்கான ஒரு சில புத்தகங்களும், உபகரணங்களும் ரூபா 10/= - ரூபா 100/= வரை பெற்றுக்கொள்ளலாம்.

இவை தவிர, பாடசாலை அலுவலக உபகரணங்களும் பாடசாலை அழிபொருள்கள், மூலப்பொருள்களும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். பாடசாலைகளுக்கு இலவச விநியோகம்.

உங்கள் தேவை எதுவானாலும் பூர்த்திசெய்யத் தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:

**ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி-36156)(36-12-17) **Tel.: 021 222 5542**


## Barbara Mulvaney Computer Training Centre

*123, Temple Road, Jaffna*


### புதிய பிரிவுகள் ஆரம்பம்

ஆரம்பமாகும் புதிய கற்கைநெறி:-

**Publishing works**
- Dissertation
- Stencil cutting
- GreetingCards
- Colour print
- Laser print
- Scaning



**Web Designing (2 1/2 months)**
- HTML
- DHTML
- JAVA SCRIPT
- FLASH
- PHP



**Hard Ware (2 - 3 months)**
Basic & Advanced

பதிவுகளை இம்மாதம் 14ம் திகதிக்கு முன்னர் தொலைபேசி மூலம் அல்லது நேரடியாக மேற்கொள்ளமுடியும்.

T:P:-222 - 5971 அலுவலக நேரம்:- 8.30am - 5.30pm

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 13 - 09 - 1937



ஆண்டவன் அடியில் 25 - 07 - 2003

### திருமதி கனகரெத்தினம் சரஸ்வதி

திதி : ஏகாதசி (13.07.2004)

ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
அம்மா உன்னை நினைத்துக் கலங்குகின்றோம்.
அன்பாய் அரவணைத்து ஆதரவு மொழி பேசி
பண்பாய் எமை வளர்த்த அம்மாவே
உன்பால் நாம்கொண்ட பாசத்தின் மிகுதியால்
உன்னைநினைந்து தவியாய் தவிக்கின்றோம்.
அறிவுரைகள் பல கூறி எம்மை வழிநடத்திய அம்மாவே!
கடமைகள் முடியுமுன் காலன் விரித்த வலைதனில்
வீழ்ந்து நீ போனதால் விம்மியே அழுகின்றோம்!
அம்மா நீ எங்குற்றாய்?

உங்கள் ஆத்மா சாந்தியடைய புளியந்தீவு நாகேஸ்வரப் பெருமானை பிரார்த்திக்கின்றோம்.

கௌரி கனகரெத்தினம் (மகள்)
முதலாம் வட்டாரம்,
அனலைதீவு.

(34058) (40-12-17-36)

## தீவகத்தில் இன்று மாடுகளுக்கு தடுப்பூசி

ஊர்காவற்றுறை, நாரந்தனை, புளியங்கூடல பகுதிகளில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான நோய்க்கு எதிரான தடுப்பு மருந்து ஏற்றும் பணி இன்று பின்வரும் இடங்களில் நடைபெறவுள்ளதாக கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர் இ.கணேசராசா தெரிவித்தார்.

செருக்கன் சந்தியில் காலை 10 மணிக்கும், நாரந்தனை வடக்கு உபதபால் நிலையத்தில் காலை 11 மணிக்கும் நாரந்தனை கமநல கேந்திர நிலையத்தில் காலை 12 மணிக்கும் தம்பாட்டி பொதுமண்டபத்தில் மதியம் 12.30 மணிக்கும் நாரந்தனை தெற்கு பொது மண்டபத்தில் பிற்பகல் ஒரு மணிக்கும் சுருவில் வாசிகசாலை, மாதாகோவில் பகுதியில் பிற்பகல் 1.30 மணிக்கும் புளியங்கூடல் நெசவு மண்டபத்தில் பிற்பகல் 2 மணிக்கும் தடுப்பு மருந்து வழங்கல் நடைபெறவுள்ளது. (எ-16)

## ஆங்கிலதின விழா

வைத்தீஸ்வராக் கல்லூரியின் ஆங்கில தின விழா, இன்று செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ் வலய உதவிக் கல்விப்பணிப்பாளர் எஸ்.தியாகராசா மற்றும் யாழ். வலய சேவை ஆலோசகர் என்.பரிமேலழகபிள்ளை ஆகியோர் கலந்து கொள்கின்றனர். (எ-9)

### ஆசிரியர் போட்டிப் பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு

நீங்களும் எதிர்காலத்தில் ஓர் ஆசிரியராக! இக்கருத்தரங்கில் கலந்துகொள்ளுங்கள்

பிரபல ஆசிரியர் **தவசேகர்.** B.Sc., PG.Dip.in Ed.

ஆரம்பம்:14.07.2004 புதன் மாலை 6.30 (பி.நே.)
புதன், வியாழன், வெள்ளி - 6.30 - 8.00 மணிவரை
இக்கருத்தரங்கு 6 நாள்கள், 12 மணித்தியாலங்கள் மட்டுமே!
மாதிரி வினா விடைகள் மற்றும் கைநூல்கள் என்பன வழங்கப்படும்.
என்றும் பிரதேச மாணவர் நலன் கருதும்

**மது கல்வி நிறுவனம்**
டச்சு வீதி, இருபாலை, கோப்பாய்.

(34063)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 13 - 08 - 1993



மறைவு 13 - 06 - 2004

செல்வி
### குமாரசாமி நிஷாளினி
(துயா)

ஈரைந்து வருடங்கள்
எம்முடன் இருந்த தயாக் குட்டியே!
இன்று எங்கம்மா யோய்விட்டாய்?
பள்ளிப் பருவமதைப்
பக்குவமாய் நீ கடந்து
பட்டம் பல பெறுவாய் என
பாச உள்ளம் நாம் பார்த்திருக்க
பரமனடி சேர்ந்தாயோ?
பாசமகளே! தங்கையே!!
அமுதூட்டிய அன்னையின்
அழுகுரல் இன்னும் ஓயவில்லை!
தோள் மேலே தூக்கி வளர்த்த
தந்தையின் சோகம் மாறவில்லை!
துணையென்று நம்பி இருந்த - உன்
அக்காவை ஆறுதல்படுத்த முடியவில்லை!
கிட்டிப்புள் அடித்த உன்
அண்ணன் மார் துக்கம் தீரவில்லை.
நிஜமாக எம் வீட்டில் நின்ற
நிஷாளினிக் குட்டியே! இன்று
நிழற்படமாகி இருப்பது ஏனம்மா?
ஏழேழு ஜென்மம் எடுத்தாலும்
எம்முடனே வந்து பிறந்திடம்மா!

கச்சாய் தெற்கு,
கொடிகாமம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்
(சி-36152)(40-12-17-36)

### நாகம்ஸ் சுன்னாகம்

விஜய். சிம்ரன். தாமு நடித்த
**துள்ளாத மனமும் துள்ளும்**
காட்சிகள்: 11.00, 3.00, 7.00 (பி.நே.)
(C/35739)(37)

### நிறைஞ்சனாஸ் சங்கானை



விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த
**கில்லி**
தினசரி: 11.00, 2.45, 6.00 (பி.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு
**SHE** [இரவு 8.45]
(C-36291)(37)

### ராஜா யாழ்ப்பாணம்

அர்ஜுன், அபிராமி, பிரகாஸ்ராஜ் நடிக்க
**விரும்புகிறேன்** (ரீலீஸ்)
தினசரி: 10.30,2.30,6.30 மட்டும்
14 முதல் மானஸ்தன்
(C/35994)(37)

## மனதார வாழ்த்துகின்றோம்



மக்கள் வங்கியின் வட பிராந்திய உதவி முகாமையாளராகப் பதவி உயர்வுபெற்று சேவையாற்றிவரும்

**திருவாளர் துரைசிங்கம் ரகு**

அவர்களைப் பாராட்டி மனநிறைவடைவதுடன் அவர்கள் மேலும் பல பதவி உயர்வுகள் பெற வாழ்த்துகின்றோம்.

மயூரா ஸ்ரோஸ்,
இல. 122, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

(சீ-36158) (40-12-36-17) சு. சிங்கராஜா.

## SRI LANKA RED CROSS SOCIETY JAFFNA BRANCH

### RENOVATION AND REPAIRS TO SRI LANKA RED CROSS SOCIETY BUILDING IN JAFFNA

Sealed Quotation have been called for the above repairs by the Sri Lanka Red Cross Society Jaffna Branch on or before 24 th July 2004.

BILL OF QUANTITIES is available at this office for perusal.

Sealed Quotations should be sent to:

The Director General,
C/o. Branch Executive Officer,
Sri lanka Red Cross Society,
Jaffna District Branch,
No.73, Kandy Road, Jaffna.

Branch Executive Officer,
Sri lanka Red Cross Society,
Jaffna District Branch,
No.73, Kandy Road, Jaffna

(சி-36153)(36-12-17)

## கண்ணீர் அஞ்சலி



எமது சக மாணவரும் அன்புக்குரியவருமான **செல்வன் தேவராசா உதயகுமார்** (**B.Com.** மாணவன், யாழ்பல்கலைக்கழகம்) அவர்களின் அகாலமரணம் எமக்குப் பெரும மனவேதனையையும் அதிர்ச்சியையும் அளித்திருக்கின்றது. அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

அவரது ஆதமா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

- 98 வர்த்தக , முகாமைத்துவ மாணவர்கள்.

(34059)(36-12-17)

## மரண அறிவித்தல்கள்

### டாக்டர் கதிர்காமு நாகேந்திரம்

(பொறுப்பதிகாரி புன்னாலைக்கட்டுவன் அரச வைத்தியசாலை)

ஏழாலை வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட டாக்டர் கதிர்காமு நாகேந்திரம் அவர்கள் நேற்று (12.07.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும் திலகவதியின் பாசமிகு கணவரும் சத்தியதர்சினியின் தந்தையும் பாக்கியலிங்கத்தின் மாமனாரும் பிருந்தன், விதுரன் ஆகியோரின் அன்புப் பேரனும் சித்திரம், சற்குணம், அன்னலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற சின்னையா மற்றும் நல்லதம்பி காலஞ்சென்ற பொன்னுச்சாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

*தர்சி நிஹால், பலாலி வீதி,*
*உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.*

தகவல்:
திலகவதி(மனைவி).

*(சி-36157)(36-12-17)*

### பொன்னம்பலம் கதிர்காமநாதன்
(B.Sc., S.L.P.S.I., S.L.E.A.S.)



நல்லூர் செட்டித்தெருவைப் பிறப்பிடமாகவும் இல. 85, சிவன்கோயிலடி திருநெல்வேலியை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கதிர்காமநாதன் (ஓய்வுபெற்ற அதிபர், நல்லூர் கொத்தணிப் பாடசாலைகள) அவர்கள் (10.07.2004) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2004) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 2.30 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.85, சிவன்கோவிலடி,*
*திருநெல்வேலி.*
**T.P:** *0777 365 161, 0777-917 690*

தகவல்:
திருமதி க.சவுந்தரநாயகி (மனைவி),
க.கணேசநாதன் (மகன்).

*(34061)(36-12-17)*

### திருமதி அசலாம்பிகை இராசகுலசிங்கம்



யாழ்ப்பாணம் நீராவியடியைச் சேர்ந்த திருமதி அசலாம்பிகை இராசகுலசிங்கம் அவர்கள் நேற்று (12.07.2004) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற விஜயரத்தினம் - சரஸ்வதியின் மூத்த புதல்வியும் காலஞ்சென்ற இராசகுலசிங்கத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், சண்முகநாதன் மற்றும் மகாலிங்கம் (பிலிப்ஸ் நேர்ஸிங் ஹோம்), கமலாம்பிகை (அதிபர், மங்கயற்கரசி வித்தியாசாலை), ஞானாம்பிகை (இந்தியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் பத்மராணி - உமாபதி, ஜெயராணி - அழகரெத்தினம், விஜயராணி - அருளானந்தம், பாமினி - ரவிந்திரன், ஸ்ரீகாந்தா - வசந்தா ஆகியோரின் அன்புத் தாயாரும காலஞ்சென்றவர்களான சத்தியகுமார், சதீஸ்குமார் மற்றும் சுரேஷ்குமார் சைலஜா, அரவிந்தன், பகீரதா, லக்ஷா, நித்தியா, சுகன்யா ஆகியோரின பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் இன்று (13.07.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*40, பிறவுண் வீதி, நீராவியடி,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
உமாபதி (மருமகன்).

*(34064)(36-12-17)*

## நோர்வேத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கர் கொழும்பில் தங்கிவிட்டார்.

எனினும், இவ்வார முற்பகுதியில் எரிக் சொல்ஹெய்ம் லண்டனில் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து உரையாடினார்.

ஆனாலும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் உரையாடிய விடயங்களின் தொடர்ச்சியாக நிலைமையை எடுத்து விளக்குவதற்கு நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் வன்னிக்குச் செல்வார் என முன்னரே கூறப்பட்டது.

அது பெரும்பாலும் மாகாணசபைத் தேர்தலுக்குப் பின்னர் இடம்பெறும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது.

அதன்படி இன்று தூதுவர் பிரஸ்கர் விசேட ஹெலிக்கொப்டரில் வன்னிக்குச் செல்கிறார்.

அரசு - புலிகள் யுத்த நிறுத்த இணக்க நிலை மோசமான கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில் நோர்வேத் தூதுவரின் கிளிநொச்சி விஜயம் இடம்பெறுகின்றது.

அமைதி முயற்சிகளை முன்னெடுத்து, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான உபாயங்களைத் தேடுவதை விட யுத்தநிறுத்த இணக்க நிலையைத் தாக்குப்பிடிக்கக் கூடிய வகையில் உறுதிப்படுத்துவதற்கான வழி வகைகளைத் தேடுவதிலேயே தமது இந்த விஜயத்தின்போது நோர்வேத்தூதுவர் அதிக கரிசனை காட்டவேண்டியவராக இருக்கிறார் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (எ-க-3-9)

## பிரதிப் பாதுகாப்பு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் போக்குவரத்துத் தொடர்பான ஏற்பாடுகளைப் பார்வையிட்டார்.

ஏ-9 கண்டி வீதி ஊடாக விடுதலைப் புலிகளின் தடைநிலைகளைத் தாண்டி வடக்கே வரும் பயணிகளுடனும், வடக்கில் இராணுவ நிலைகளைத் தாண்டி புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குச் செல்லவிருக்கும் பயணிகளுடனும் அவர் கலந்துரையாடினார். பயணிகள் சந்திக்கும் அசௌகரியங்களை அவர் கேட்டறிந்தார். நயினாதீவு நாக விகாரைக்கும் அவர் விஜயம் செய்தார்.

காங்கேசன்துறை கடற்படைத்தளத்தில் கடற்படையினரை அவர் சந்தித்தார்.

பலாலியிலும், முகமாலையிலும், காங்கேசன்துறையிலும் படையினர் மத்தியில் அவர் உரையாற்றினார்.

வடக்குப் பாதுகாப்பு நிலைமைகள் குறித்து வடபகுதி படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால்லா பிரதிப் பாதுகாப்பு அமைச்சருக்கு விளக்கமளித்தார். (எ-க-3)

## தமிழ்த்தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரிவினைக்கு எதிராக செயற்படும் எமது கொள்கையை மாற்றிக்கொள்ளமாட்டோம் என்று ஆணித்தரமாக எடுத்துக் கூறியே இந்த அரசில் இணைந்துள்ளோம்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை, பிரிவினைக்கு இட்டுச்செல்லும் என்பதை தெளிவாகக் கூறுகின்றோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையை அடிப்படையாகக் கொண்டு பேச்சுக்களை நடத்தமாட்டேன் என ஜனாதிபதியும் எம்மிடம் கூறியுள்ளார்.

பேச்சுக்கள் என்பது பொது எதிரியை அழைத்து வந்து நடுவீட்டில் அமர வைத்து அளவளாவுதல் அல்ல. முன்னைய அரசுகள் அப்படிச் செய்த காரணத்தால்தான் இன்றைய விளைவுகளைச் சந்தித்துள்ளோம்.

இறுதித் தீர்வுகான பேச்சுக்களை ஆரம்பிக்கலாமே தவிர இடைக்காலம், தற்காலிகம் என்ற போர்வையில் பேச்சுக்களை ஆரம்பித்தால் பாரிய விளைவுகளை எதிர்கொள்ள நேரிடும் - என்றார் அவர்.

"இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை பற்றி மட்டுமே முதலில் பேச்சு அதைவிடுத்து எந்தப் பேச்சுக்கும் தயாரில்லை என்று விடுதலைப் புலிகள் திட்டவட்டமாகக் கூறியுள்ளனரே!" - என்ற கேள்விக்கு சோமவன்ஸ அமரசிங்க கூறியதாவது:-

விடுதலைப் புலிகள் ஒவ்வொரு முறையும் திட்டவட்டமாகவே கூறிவருகின்றனர். கடந்த ஐ.தே.மு. அரசிடமும் இப்படிப் பலமுறை திட்டவட்டமாக கூறியுள்ளனர். கடும் நடவடிக்கை எடுப்போம் என்று மிரட்டியுள்ளனர். விடுதலைப் புலிகளை திருப்திப்படுத்த கடந்த அரசு பல உத்திகளைக் கையாண்டது.

கடந்த அரசு இதோ யுத்தம் வருகின்றது, வந்துவிட்டது, என்றெல்லாம் மிரட்டியது, எங்கே யுத்தம் வந்ததா என்று கேட்கிறேன்.

அப்படி யுத்தம் ஆரம்பித்தால் அதை இலகுவாகத் தடுக்க முடியும். நிபந்தனைகளுக்குப் பயந்து யாருக்கும் அடிபணிய முடியாது. அப்படியான வாக்குறுதிகளை வழங்கி நாம் ஆட்சியைக் கைப்பற்றவில்லை. எனவே, விடுதலைப் புலிகள் கூறும் திட்டவட்ட முடிவுகள் எப்போதும் திட்டவட்டமாக இருந்ததில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (க)

## அமெ.புலனாய்வு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, கொழும்பிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சகல பொருள்களும் கப்பலில் ஏற்றப்படும் முன்னர் விசேட எக்ஸ்றே கருவி மூலமாகச் சோதனையிடப்பட வேண்டும் என்று அமெரிக்க அரசு இலங்கை அரசுக்கு அறிவித்திருப்பதாகவும் - அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (-4)

# புதிய நீதிமன்ற வளாகத்துக்கு நாளை அடிக்கல் நடுகை

யாழ்ப்பாணம்,ஜூலை13

புதிதாக நிர்மாணிக்கப்படவுள்ள யாழ் நீதிமன்ற வளாகக் கட்டடத் தொகுதிக்கான அடிகல் நடும் நிகழ்வு நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ். வரதராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா அடிக்கல்லினை நட்டு வைப்பார்.

இந்நிகழ்வில் நீதி அமைச்சின் செயலாளர் எஸ்கே. ஹம்லத், நீதி சேவை ஆணைக்குழுவின் செயலாளர் டி.இ. ஜெயதிலக மற்றும் நீதிச் சட்ட மறுசீரமைப்புக் குழுவினர், உலக வங்கியின் உயரதிகாரிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், குடாநாட்டிலுள்ள நீதிபதிகள், சட்டத்தரணிகள், நீதிமன்ற அலுவலர்கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்துகொள்வர்.

இந்நிகழ்வைத் தொடர்ந்து வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறும் விசேட கலந்துரையாடலில் பிரதம நீதியரசர் கலந்துகொள்வார்.(எ-9)

## அனுமதி பெறாது இயங்கிய பயணிகள் விடுதிக்குச் சீல்!

யாழ். நகரில் மாநகரசபையின் அனுமதி பெறாமல் இயங்கிவந்த பயணிகள் தங்கும் விடுதி (Lodge) ஒன்று யாழ். நீதிமன்ற மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரனின் உத்தரவின் பேரில் பொலீஸாரால் சீல்வைக்கப்பட்டது.

யாழ். மாநகரசபையின் அனுமதி பெறாமல் இயங்கிவந்த மேற்படி விடுதி தொடர்பாக யாழ். நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டதையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், நகரில் அனுமதிப்பத்திரங்கள் இன்றி வேறு விடுதிகள் இயங்குகின்றனவா என்பதைக் கண்டறிவதற்காக திடீர் முற்றுகைகள மேற்கொள்ளுமாறும் நீதிவான் பொலீஸாருக்கு உத்தரவிட்டார். (4)

## கருணாவுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச ஊடகத்துக்குத் தந்தால் கருணாவுக்கு கொடுத்த அதேயளவு நேரத்தைப் புலிகளுக்கும் கொடுக்க அரசு தயார்.

டக்ளஸ் தேவானந்தாவுக்கும், கருணாவுக்கும் இடையிலான எந்த அரசியல் நடவடிக்கைகளையும் அரசு பொறுப்பேற்க முடியாது - என்றார் அமைச்சர் மங்கள சமரவீர. (எ-9)

## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் மத்தியில் உரையாற்றிய அவர் கூறியதாவது:-

யாழ்ப்பாணத்தில் நீண்ட காலமாகப் பணி புரியும் படையினருக்கு ஓய்வு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளோம்.

புதிதாகப் படைக்கு ஆள்களைத் திரட்டி, அவர்களை இங்கு நியமிக்கவிருக்கின்றோம். அவர்களை நியமித்ததும் இங்கு நீண்ட காலம் பணியாற்றியவர்களை அவர்களின் சொந்த இடத்துக்கு சமீபமாக இடமாற்றம் செய்வோம்.

படையினரின் க்ஷேம நலன்களுக்கு முன்னுரிமை வழக்குவோம - என்றார் அவர். (எ-3)

## கூட்டணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கும் அரசு கொண்டுள்ள சமாதானக் கொள்கை களைத் தேர்தல் முடிவுகள் மேலும் உறுதிப்படுத்துகின்றன - என்று அந்தச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-9)

# மரண அறிவித்தல்கள்

### திருமதி இராசம்மா வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர்)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், சித்தன்கேணியை வசிபபிடமாகவும் கொண்ட திருமதி இராசம்மா வேலுப்பிள்ளை நேற்று (12.07.2004) திங்கட்கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் சிவகுருநாதன் (ஆசிரியர், கொக்குவில் இந்துக் கல்லூரி), காலஞ்சென்ற வல்லிபுரம்பிள்ளை சுசிலாதேவி, சிதம்பரநாதன் (கனடா), கணேசன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபை, மானிப்பாய்), மாணிக்கவாசகர் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் திருமதி பரமேஸ்வரி சிவகுருநாதன் (ஆசிரியர், யா/கலட்டி மெ.மி.த.க பாடசாலை), தா.வல்லிபுரம்பிள்ளை (கனிப்பொருள் கூட்டுத தாபனம் புல்மோட்டை), திருமதி யோகாம்பிகை சிரம்பரநாதன் (கனடா), திருமதி விமலாதேவி கணேசன் (ஆசிரியர் - சித்தன்கேணி ஸ்ரீ கணேச வித்தியாலயம்), திருமதி வாசுகி மாணிக்கவாசகர் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சிவரஞ்சினி (யாழ். பல்கலைக்கழகம 2ஆம் வருட மருத்துவ மாணவி), நிருத்திகா (கனடா), லாவண்யா (கனடா), பவித்திரா (கனடா), சுதர்சன் (கண்ணன்), ஆதிநீலன் (உயர்தர வகுப்பு மாணவன், யாழ்ப்பாணக் கல்லூரி), வேணுஜன் (கனடா), விஷ்ணுஜன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2004) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு மயானத்திற்கு எடுதத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிவன் கோவிலடி,*
*சித்தன்கேணி.* (34066)(40-12-17)

தகவல்
வே.கணேசன் (மகன்)

### திருமதி சுப்பிரமணியம் பொன்னம்மா

(பேரார் ஆச்சி)

காரைநகர், புதுறோட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பொன்னம்மா (பேரார் ஆச்சி) அவர்கள் நேற்று (12.07.2004) திங்கட்கிழமை மாலை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பேரம்பலம் சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற தில்லையம்பலம் நேசம்மா (சிங்கப்பூர்), சரஸ்வதி, நடராசா, செல்வரத்தினம், இராசையா, சிவபாக்கியம், ராணிஅம்மா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற தில்லையம்பலம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற காரளசிங்கம், நேசமணி, இராஜேஸ்வரி, யோகேஸ்வரி, குணசிங்கம், சிவசுப்பிரமணியம் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.07.2004) செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு அவரது இலலத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகளுக்காக பூதவுடல் சாம்பலோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*புதுறோட்,*
*காரைநகர்.* (C/36159)(40-12-17)

தகவல்:
நடராசா (மகன்).

### திருமதி பொன்னம்பலம் அம்பிகை



ஏழாலை மேற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னம்பலம் அம்பிகை அவர்கள் நேற்று (12.07.2004) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் புஸ்பாதேவி, பத்மாதேவி, நந்தகுமார், கலாதேவி, உமாமகேஸ்வரி, காலஞ்சென்ற கௌரிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சண்முகநாதனின் அன்புச் சகோதரியும் பங்கயற்செல்வி, கோணேஸ்வரராஜா, காலஞ்சென்றவர்களான லக்சுமிகாந்தன், ராஜசூரியர், கௌரிகாந்தன் ஆகியோரின் அன்பு மாமியாரும் காயத்திரி, புவனகிறீஷா, கீர்த்தனா, சோபனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (13.07.2004) செவ்வாய்க்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 2.00 மணிக்கு ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தேவிவாசம், ஏழாலை மேற்கு,*
*சுன்னாகம்.* (36065)(40-12-17)

தகவல்:
குடும்பத்தினர்.


அன்பளிப்புப் பொருள்களை மட்டுமல்ல உங்கள் அன்பினையும் சேர்க்கின்றோம் என்பதை மறந்துவிடாதீர்கள்.

பொதி விநியோக சேவையில் வெற்றிகரமாக...

யாழில் TNT யின் இரண்டுவருடப் பூர்த்தியை முன்னிட்டு



- சர்வதேச கூரியர் சேவை,
- உள்நாட்டு கூரியர் சேவை,
- சர்வதேச தபால் சேவை

போன்ற சேவைகளுக்கு 20% விசேட கழிவு வழங்குகின்றோம்.

இச்சலுகை 2004 ஜூலை 19 வரை மட்டுமே!

TNT கூரியர் சேவை,
56/15, ஸ்ரான்லி வீதி,
(யாழ். பெரிய தபால்கந்தோர் முன்பாக) யாழ்ப்பாணம்.
222 3771, 0777-270452, 0777-915824

இத்துடன், ரூபா 200/= VOUCHER உம் வழங்கப்படும். இதனை இரண்டு மாத காலத்துக்குள் சமர்ப்பிப்பவர்களுக்கு எமது சேவையில் கழிவு வழங்கப்படும். (சி-36154)(30)



தென்மராட்சி மண்ணில்
BRIGHTEN கல்வி நிலையத்தில்
வடமராட்சி
Modern கல்வி நிலைய ஆதரவில்
A/L கலை, வர்த்தக வகுப்புகள்
யாழ் மாவட்ட தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் சங்கமம்

வர்த்தகம்
பொருளியல் : திரு. உதயன்
வர்த்தகம் : திரு. முரளி
கணக்கீடு : திரு. சயந்தன்

கலை
தமிழ் : திரு. நடா - வியா. 4.00
திரு. நவம் - புதன் 4.00
இந்துநாகரிகம் : திரு. ஜோதீஸ்வரன்
புவியியல் : திரு. குமரன் - சனி, ஞாயி. 4 மணி
திரு. சிவகுமார்
அளவையியல் : திரு. சுரேஸ்
வரலாறு : பிரபல ஆசிரியர்

இந்து நாகரிகம் சனி, ஞாயிறு பி.ப.3.00 மணிக்கு நடைபெறும்.
ஆரம்பம்: 11.07.2004 பி.ப.3.00 மணி (பு.நே.)
பாடங்கள் யாவும் எம் முன்னணி ஆசிரியர்களால் திறம்பட நடத்தி முடிக்கப்படும்.
- நிர்வாகம்.
(33934)(40-12-17)



ஆசிரியர் போட்டிப் பரீட்சை
மாதிரி வினாத்தாள் வகுப்புகள்
த.தவசேகர் B.Sc., P.G.Dip.in.Ed.
புதன், வியாழன், வெள்ளி 3.30 - 6.30 (SLT)
(34063) Science Hall கன்னாதிட்டி.



பாடசாலை மாணவர்களுக்கான டொச் வகுப்புகள்
ஆரம்பம்:
3, 4, 5, 6ஆம் வகுப்புகளுக்கு
BERN, ZURICH
ஆகிய பெரு நகரங்களில்
லிங்கம் மாஸ்ரரின் கற்பித்தல்
தொடர்பு: 062 7974164 - 079 3344733
4665 OFTRINGEN, SWISS.
(33927)



தேவை
யாழ்ப்பாணத்திலுள்ள புகழ்பெற்ற ஓர் இந்து ஆலயத்துக்கு பல வேலைகளும் செய்யக்கூடிய உதவியாளர் ஒருவர் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
விளம்பர இல.2326
மே/பா- உதயன்
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி.34057)



புதிய பிரிவுகள் ஆரம்பம்
பிரிவு 1 : 14.07.2004
பிரிவு 2 : 18.07.2004
அநேக மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் இரண்டு பிரிவுகள் ஆரம்பிக்கப்படவுள்ளதென்பதை மாணவர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.
ஆர்வமுள்ள மாணவர்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்.
இயக்குநர்,
IIS
100, Clock Tower Rd., Jaffna.
(C-36132)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13.07.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.